விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹூ மாசி மீ 26-ம் உ | சனிக்கிழமை | (10 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 12 | ஓசை 20

## த.தே.இ., ஈ.என்.டி.எல்.எவ்.வின் கொலை, கொள்ளைத் திட்டம்!

(கொழும்பு)

நாட்டில் கொலை, கொள்ளைகளைச் செய்து பெரும் குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு சட்டவிரோத தமிழ் தேசிய இராணுவமும் ஈ. என். டி. எல். எவ்வினரும் திட்டமிட்டிருந்தது நுவரெலியாவில் செ டிகுளத்தைச் சேர்ந்த ஒருவர் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து வெளியாகியிருக்கிறது.

சட்டவிரோத தமிழ் தேசிய இராணுவம் ஈ. என். டி. எல். எவ். இயக்கத்தினருடன் இணைந்து பல கொள்ளைகளையும் கொலைகளையும் செய்து நாட்டில் உறுதியற்ற நிலைகளை ஏற்படுத்த வகுத்திருந்த திட்டத்தினைப் பொலீஸார் கண்டு பிடித்துள்ளார்கள் என்று அரசாங்க அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. நுவரெலியாவில் நரேன் விஜயபாலன் என்பவர் கைதுசெய்யப்பட்ட (6ஆம் பக்கம் பார்க்க)

# ஆயுதப்படை - புலிகள் உரசல்கூட ஏற்படாது!

## இருதரப்புப் பேச்சுக்களிலும் இணக்கம்

(கொழும்பு)

**விடுதலைப் புலிகளுக்கும் பாதுகாப்புப் படையினருக்குமிடையில் தற்செயலாக ஏற்படக்கூடிய மோதல்களைத் தவிர்க்கும் வகையில் விடுதலைப்புலிகள் அமைப்பும், அரசாங்கமும் ஒருங்கிணைந்து சில ஒழுங்குமுறைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது.**

உயர் கல்வி அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் தலைமையிலான அரசாங்க அணியினருக்கும், விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளுக்குமிடையிலான சுற்றுப் பேச்சுவார்த்தைகளின்போது, கடந்த செவ்வாயன்று மேற்சொன்ன முடிவு எடுக்கப்பட்டதாம்.

புலிகள் அமைப்பின் இராணுவப் பிரிவுக்கும், அரசாங்கத்தின் இராணுவத்துக்கும் இடையில் மோதல்களைத் தவிர்க்கவே மேற்படி ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்புப் போராளிகளும், அரசாங்கத் தரப்புப் பாதுகாப்புப் படையினரும் ஒருவரையொருவர் இனங்கண்டு கொள்ளவும், இலங்கை இராணுவம் இடம் பெயர்ந்து செல்லும்போது அவர்கள் மீது விடுதலைப் அமைப்பைச்சேர்ந்தபோராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளைத் தவிர்க்கவும் பேச்சுவார்த்தைகளின் போது ஆலோசிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டதாம்.

விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தற்செயலாகவாவது அவர்களும், நாங்களும் மோதிக் கொள்வது, வடக்கிலும் கிழக்கிலும் சமாதானத்தைக் கொணர்ந்து நாட்டை வழமைக்குத் திருப்பும் எமது முயற்சிகளுக்குக் குந்தகமாக அமைந்துவிடும் என்று மேற்படி தரப்புகள் தெரிவித்துள்ளதாகத் தெரிய வருகிறது.

### சிறுசம்பவம் கூட நடக்கக்கூடாது

அரசாங்கத்துக்கும் புலிகள் அமைப்புக்கும் இடையில் பேச்சுவார்த்தைகள் இடம்பெறும் இச் சந்தர்ப்பத்தில் ஒரு சிறு சம்பவம் அல்லது கருத்துவேறுபாடாவது பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதாக அமையக்கூடாது. இம் முடிவுகள் இரு தரப்பிலும் சகல மட்டத்தினருக்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்று முடிவு கட்டப்பட்டுள்ளதாம்.

கடந்த வாரங்களில் பாதுகாப்புப்படையினர் தமது அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் இடையிட்டுத் தலையிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாலுநாட்களுக்கு முன்பு, ஆயுதபாணிகளான விடுதலைப்புலிகள், திருகோணமலையில் இராணுவ வாகனம் ஒன்றைத் தடுத்து நிறுத்தி சோதிக்க முயன்றபோது மனஸ்தாபம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

## ஆற்காடு வீராசாமி ராஜினாமா

## மினிபஸ்கள் மீது கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

மினிபஸ்ஸில் பிரயாணிகள் ஏற்றுதல் அவற்றின் வேகம் ... பஸ் சாரதி விடுதலைப் புலிகளினால் வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்தி...

## இரு கப்பல்களில் தப்பியவர்கள் கதி

# ஒன்று திரிசங்கு நிலையில் ஒன்று ஒரிஸா நோக்கி

(சென்னை)

**வடக்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து தப்பியோடிய தமிழ் தேசிய இராணுவத்தினரையும், ஈ. பி. ஆர். எல். எவ்., ஈ. என். டி. எல். எவ். இயக்கத்தினரையும் தமிழ் நாட்டிற்குள் இறங்க விடாது சென்னைத் துறைமுக அதிகாரிகள் திருப்பி அனுப்பியுள்ளனர்.**

கடந்த புதன்கிழமை சென்னைத் துறைமுகத்தை அடைந்த 3000 தமிழ் தேசிய இராணுவத்தினரை துறைமுகத்தில் இறங்க விடாது அனுப்பியது போன்று மேலும் ஓர் கப்பலில் சென்ற ஈ.பி.ஆர்.எல்.எவ்.,ஈ.என்.டி..எல்.எவ். இயக்கத்தைச் சேர்ந்தவர்களையும், அவர்கள் குடும்பத்தினரையும் சென்னைத் துறைமுக அதிகாரிகள் திரும்பியனுப்பியுள்ளார்கள்.

இவ் இரு கப்பல்களும் திருகோணமலையில் இருந்து புறப்பட்டதாக இலங்கை இராணுவ வட்டாரங்கள் ஊர்ஜிதம் செய்தன. தேசிய இராணுவத்தினர் சென்ற கப்பல் எங்கு சென்றுகொண்டிருக்கின்றது என்பதைப் பற்றிய தகவல்கள் ஏதும் கிடைக்கவில்லை இரண்டாவது கப்பல் ஒரிஸாவை நோக்கிச் சென்றுகொண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சென்னையில் இக்கப்பலுக்கு அனுமதி மறுக்கப்பட்டதும் மத்திய அரசு தலையிட்டு ஒரிஸாவுக்கு அக்கப்பலை கொண்டு செல்ல உத்தரவிட்டுள்ளது.

இலங்கையிலிருந்து வரும் இவர்களுக்கு ஆதரவு கொடுக்கும்படி ஒரிஸா அரசை மத்திய அரசு கேட்டுள்ளது. ஒரிஸாவில் சில நாட்களுக்கு மட்டும் தற்காலிகமாக அவர்கள் வைக்கப்படுவார்கள். பின்னர் அவர்கள் தமிழ் நாட்டுக்கு திருப்பி அனுப்பப்படுவார்கள். இது தொடர்பாக மத்திய அரசு தமிழக அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

## சமூக நலச் சங்க நிதி மோசடி வாழப்பாடிக்கு விளக்க மறியல்

(சென்னை)

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி சேலத்தில் உள்ள பல்லவர் சமூக நல சங்க நிதி மோசடி தொடர்பாக பதினைந்து நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மதுரையில் கைதான இவர் சேலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதபதி பதினைந்து நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவருடன் மேலும் ஐந்து நபர்கள் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கடற்படை - மீன்பிடிப் படகு மோதல் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகு மீது இலங்கை ... படகு அதிவேகமாக வந்து தமது படகின் மீது மோதியதாகவும் தம்முடன் இருந்த இன்னொருவர் கடலில் குதித்...

## ஆறு வருடமாகத் திருத்தப்படாத வீதி

(பண்டத்தரிப்பு)

கீரிமலை சேந்தான்குளம் சந்தியிலிருந்து தொட்டிலடிச் சந்தி வரையுள்ள 3 மைல் நீளமான வீதி 1984ம் ஆண்டின் பின் திருத்தவோ, பராமரிக்கப்படவோ இல்லை.

பாதைசாரிகளும் சரி, வாகனங்களும் சரி அவ் வீதியால் பிரயாணஞ்செய்வதில் இடர்ப்படுகின்றனர்.

இளவாலைச் சந்தியிலிருந்து சேந்தான்குளம் வரையுள்ள வீதியும், பெரியவிளான் சந்தியிலிருந்து தொட்டிலடி முதற் சந்தி வரை உள்ள வீதியில் பெரிய கிடங்குகள் உள்ளன.

சி. எஸ். ஹமீத் தலைமையி லான அரசாங்க அணியினரும், விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதிநிதிகளுக்கு மிடையிலான சுற்றுப் பேச்சு வார்த்தைகளின்போது, கடந்த செவ்வாயன்று மேற் சொன்ன முடிவு எடுக்கப்பட்டதாம்.

புலிகள் அமைப்பின் இராணுவப் பிரிவுக்கும், அரசாங்கத்தின் இராணுவத்துக்கும் இடையில் மோதல்களைத் தவிர்க்கவே மேற்படி ஒழுங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக விஷயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## ஆற்காடு வீராசாமி ராஜினாமா

(சென்னை)

தமிழ்நாடு உணவுத் துறை அமைச்சர் ஆற்காடு வீராசாமி நேற்றுத் தமது அமைச்சர் பதவியை ராஜினாமாச் செய்தார். நீண்டகாலம் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினராக இருந்தவர்

## புலிகள் முஸ்லிம் முன்னணி சந்திப்பு!

(செங்கலடி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிக்கும் முஸ்லிம் ஐக்கிய விடுதலை முன்னணிக்குமான சந்திப்பு ஒன்று நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அலுவலகத்தில் நடைபெற்ற இச் சந்திப்பில் தலைவர் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் திரு. யோகி ஆகியோர் விடுதலைப் புலிகள் சார்பில் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பில் தற்போதைய அரசியல் சூழ்நிலை குறித்தும், முஸ்லிம்களின் பிரச்சினை குறித்தும் ஆராயப்பட்டதாகத் தெரிய வருகிறது. (39)

## இன்று மல்லிகை, வெள்ளிவிழா

(யாழ்ப்பாணம்)

'மல்லிகை' வெள்ளிவிழா மலர் வெளியீட்டு விழா இன்று காலை 9.30 மணியளவில் நல்லூர் நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலாலா யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு. வி. பி. பாலசிங்கம். திரு. வ. இராசையா ஆகியோர் இவ்விழாவின் ஆரம்பத்தில் மங்கள விளக்கேற்றி வைப்பர்.

பல எழுத்தாளர்களும், அறிஞர்களும் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். (தி)

விடுதலைப் புலிகள் அமைப்புப் போராளிகளும், அரசாங்கத் தரப்புப் பாதுகாப்புப் படையினரும் ஒருவரையொருவர் இனங்கண்டு கொள்ளவும், இலங்கை இராணுவம் இடம் பெயர்ந்து செல்லும்போது, அவர்கள் மீது விடுதலைப் புலிகள் அமைப்பைச்சேர்ந்தபோராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்யக்கூடிய சாத்தியக் கூறுகளைத் தவிர்க்கவும் பேச்சு வார்த்தைகளின்போது ஆலோ

சிக்கப்பட்டு முடிவு எடுக்கப்பட்டதாம்.

விடுதலைப் புலிகள் அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளவிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் தற்செயலாகவாவது அவர்களும், நாங்களும் மோதிக் கொள்வது, வடக்கிலும் கிழக்கிலும் சமாதானத்தைக் கொணர்ந்து நாட்டை வழமைக்குத் திருப்பும் எமது முயற்சிகளுக்குக் குந்தகமாக அமைந்துவிடும் என்று மேற்

சுவார்த்தைகள் இடம்பெறும் இச் சந்தர்ப்பத்தில் ஒரு சிறு சம்பவம் அல்லது கருத்துவேறுபாடாவது பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதாக அமையக்கூடாது. இம் முடிவுகள் இரு தரப்பிலும் சகல மட்டத்தினருக்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்று முடிவு கட்டப்பட்டுள்ளதாம்.

கடந்த வாரங்களில் பாதுகாப்புப்படையினர் தமது அன்றாட வேலைகளில் ஈடுபட்டிருந்த சமயம் விடுதலைப் புலிகள் இடையிட்டுத் தலையிட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. நாலு நாட்களுக்கு முன்பு, ஆயுத பாணிகளான விடுதலைப்புலிகள், திருகோணமலையில் இராணுவ வாகனம் ஒன்றைத் தடுத்து நிறுத்தி சோதிக்க முயன்றபோது மனஸ்தாபம் ஏற்பட்டதாகவும் தெரியவருகிறது.

# மினிபஸ்கள் மீது கட்டுப்பாடு

(யாழ்ப்பாணம்)

மினிபஸ்ஸில் பிரயாணிகள் ஏற்றுதல் அவற்றின் வேகம் போக்குவரத்து விதிகள் ஊழியர்கள் தொடர்பாகவும் நேற்று விடுதலைப் புலிகளுக்கும், மினிபஸ்சங்கப் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடைபெற்ற கலந்துரையாடலில் சில முடிவுகள் எடுக்கப்பட்டன.

இத் தீர்மானங்களில் மினிபஸ்களை மிதமிஞ்சிய வேகத்தில் செலுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது. மேலும்

பஸ் சாரதி விடுதலைப் புலிகளினால் வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரம் வைத்திருத்தல் வேண்டும். அடுத்ததாக பஸ்களைச் சீராக வைத்திருத்தல் வேண்டும். மினிபஸ் நடத்துனர்கள் 16 வயதிற்கு கீழ்ப்பட்டாதவர்களாக இருத்தல் வேண்டும் என்பதே பிரதான தீர்மானங்கள் ஆகும்.

இக்கலந்துரையாடலில் மினிபஸ் உரிமையாளர்கள் உட்பட சுமார் 500 பேர் கலந்துகொண்டனர்.

# தபால் ரயிலில் பொதிகள் அனுப்பலாம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில ஆண்டுகளுக்குப் பின்னர் இன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்லும் இரவு தபால் ரயிலில் பொதிகள் ஏற்றுக் கொள்ளப்படும் என்று யாழ். ரயில் நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

83 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடபகுதிக்கான ரயிலில் பொதிகள் ஏற்றுக்கொள்ளப் படுவது குறிப்பிடத்தக்கது என்றும் சகல ரயில் நிலையங்களுக்கும் கொண்டு செல்ல பொதிகள் ஏற்றுக் கொள்ளப்

படும் என்றும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

இது இவ்வாறிருக்க,நேற்று மாலை 7.15மணிக்கு கொழும்பிலிருந்து புறப்பட்ட இரவு ரயில் இன்று 6.30 மணிக்கு யாழ். வந்து சேரும் என்றும் 7.25 மணிக்கு காங்கேசன்துறை போய்ச்சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. காங்கேசன்துறையிலிருந்து மாலை 5.40 மணிக்குப் புறப்படும் இரவு ரயில் மறுநாள் காலை 5.15 மணிக்கு கொழும்பு போய்ச் சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (தி)

# திருமலையில் கொள்ளை, களவு ஓட்டம்

கிழக்கு மாகாணத்தின் மையமான திருகோணமலை துறைமுகப்பகுதி சமீபநாட்களில் களைகட்டியிருப்பதாக பி. பி. செய்தி ஒன்று கூறுகிறது ஈ.பி.ஆர்.எல்.எவ். குழுவினர் பெட்டிகளைக் கட்டி, மூட்டைமுடிச்சுகளுடன் தமது அக்கரைப் பிரயாணத்தை தொடங்கத் தயார் நிலையில் உள்ளனராம். இதே வேளை, ரெலோ குழுவினர் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு போகலாம் என்றஎண்ணத்தில்

கடைசி நேரத்தில் கொள்ளைகளிலும், களவுகளிலும் ஈடுபட்டுவருவதாக அச் செய்தி அறிக்கை மேலும் தெரிவிக்கிறது

## பொய்ச் செய்தியால் தாய் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

மத்திய கிழக்கு நாடொன்றில் வேலை செய்யும் தனது மகன் விபத்தில் சிக்கி மரணமானார் என்று உறவினர்களினால் பொய்ச் செய்தி சொல்லப்பட்டதை உண்மை என்று

(6-ஆம் பக்கம் பார்க்க)

## வடமராட்சிக்கு 22 பட்டதாரி ஆசிரியர்கள்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கல்விக் கோட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குப் புதிதாக நியமனம் பெறும் பட்டதாரி ஆசிரியர்களில் 21 பேர் நியமனம் பெற்றுள்ளார்கள்.

இவர்களில் 11 பேர் கஷ்டப் பிரதேசமான வடமராட்சி கிழக்கில் உள்ள பாடசாலைகளுக்கு நியமனம் செய்யப்பட்டுள்ளதாக வடமராட்சி உதவிக்கல்விப் பணிப்பாளர் திரு. பொ. வீரபத்திரன் தெரிவித்தார்.

அப்பாடசாலைகளில் அவர்கள் நியமனங்களை ஏற்காவிடில், அவர்கள் நியமனங்களை இழந்தவராவார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (36)


## ஈழநாதம்

### ஞாயிறு மலர்

11-3-90 இதழில்

- ★ போராட்டத்தின் நிழலில்
- ★ கள நிகழ்வுகளும் தள நினைவுகளும்
- ★ இலக்கியத்தடம்
- ★ மடவை
- ★ சிறுகதை
- ★ கவிதைகள்
- ★ சிரித்திரன் சுந்தரின் (கதைத்தேன்)
- ★ மகளிர் பகுதி
- ★ மருத்துவப் பகுதி
- ★ மனோலயம்
- ★ பாரதச் சுவடுகள்

மற்றும் தரமான படைப்புக்களுடன் வெளி வருகிறது

விலை ரூ. 5-00


## சமூக நலச் சங்க நிதி மோசடி வாழப்பாடிக்கு விளக்க மறியல்

(சென்னை)

தமிழ்நாடு இந்திரா காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. வாழப்பாடி ராமமூர்த்தி சேலத்தில் உள்ள பல்லவர் சமூக நல சங்க நிதி மோசடி தொடர்பாக பதினைந்து நாட்கள் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மதுரையில் கைதான இவர் சேலம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிபதி பதினைந்து நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவருடன் மேலும் ஐந்து நபர்கள் இது தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## கடற்படை - மீன்பிடிப் படகு மோதல் ஒருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

மாதகல் கடலில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களின் படகுமீது இலங்கை கடற்படை ரோந்துப்படகு மோதியதில் ஒருவர் பலத்த காயமடைந்துள்ளார்.

அகஸ்ரின் யோசப் வலன்ரீன் எனும் இருபத்திரெண்டு வயது இளைஞரே இதில் காயமடைந்தவராவார் இவர் இருநாட்கள் கூறுகையில்.

தாம் நேற்று பகல் இரண்டரை மணியளவில் கடலில் மீன் பிடித்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கும் போது இலங்கை கடற்படையின் ரோந்துப்

படகு அதிவேகமாக வந்து தமது படகின் மீது மோதியதாகவும் தம்முடன் இருந்த இன்னொருவர் கடலில் குதித்துவிட்டதாகவும் தாம் படகிலேயே நின்றதால் காயம் ஏற்பட்டதாகவும் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் காயமடைந்த தன்னையும், தனது படகையும் இலங்கைக் கடற்படையினர் கரைக்குக் கொண்டுவந்து சேர்த்துவிட்டதாகவும் வைத்தியர்கள் பரிசோதனையில் தமதுதோள் எலும்பு முறிந்துள்ளதாகத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார். (லோ)

# குளிரூட்டல் மூலம் விவசாயப் பொருட்களுக்கான பயிற்சி

(மல்லாகம்)

லண்டனிலுள்ள வெளிநாட்டு அபிவிருத்தி இயற்கை வளம் கற்பிக்கும் நிலையம் வெப்பநிலை வலய நாடுகளில் குளிரூட்டல் மூலம் விவசாயப் பொருட்களுக்கான, பயிற்சிக்கான விண்ணப்பங்களை மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்கமூலம் கோரியுள்ளது.

இப்பயிற்சி இவ்வருடம் ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி

முதல் டிசெம்பர் 7ஆம் திகதி வரையிலானதெனவும் விண்ணப்தாரிகளுக்கேற்ப இவை நீடிக்கப்படலாம் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பயிற்சிக்கு உயிரியல், விவசாயம், பொறியியல் பட்டதாரிகளும் இத் தொழில் அனுபவம் உள்ளவர்களும் விண்ணப்பிக்கலாம். பயிற்சி ஆங்கிலத்தில்நடைபெறவிருப்

(6ஆம் பக்கம் பார்க்க)

# கொலை முயற்சி, கொள்ளை மூன்று படையினர் கைது

(நீர்கொழும்பு)

மூன்று படையினர் உட்பட ஆறு பேர் கொலை முயற்சி, கொள்ளை தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

நீர்கொழும்பு பகுதியில் இடம்பெற்ற இக்குற்றச்சாட்டின் மீது இவர்கள் கைது செய்யப்பட்டு நீர்கொழும்பு நீதவான் திரு. என். மகேந்திரராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதவான் இவர்களை இம் மாதம் 12ந்திகதிவரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

இவர்களில் ஒரு பெண்ணும், முன்னாள் கிராம சேவகரும் அடங்குவர்.

## அங்குரார்ப்பணக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

செம்மலைட் விளையாட்டுக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் 11ம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அமைப்புப் பேருவனர்கள். இது தொடர்பாக மத்திய அரசு தமிழக அரசுடன் தொடர்பு கொண்டுள்ளது.

## ஆறு வருடமாகத் திருத்தப்படாத வீதி

(பண்டத்தரிப்பு)

சிறிமலை சேந்தான்குளம் சந்தியிலிருந்து தொட்டிலடிச் சந்தி வரையுள்ள 3 மைல் நீளமான வீதி 1984ம் ஆண்டின் பின் திருத்தவோ, பராமரிக்கப்படவோ இல்லை.

பாதசாரிகளும் சரி, வாகனங்களும் சரி அவ் வீதியால் பிரயாணஞ்செய்வதில் இடர்ப்படுகின்றனர்.

இளவாலைச் சந்தியிலிருந்து சேந்தான்குளம் வரையுள்ள வீதியும், பெரியவிளான சந்தியிலிருந்து தொட்டிலடி முதற் சந்திவரை உள்ள வீதியில் பெரிய கிடங்குகள் உள்ளன.

இரு வாகனங்கள் எதிரெதிராக வந்து விலத்தும்போதும் ஒன்றை ஒன்று முந்தி விலத்தும் போதும் சாரதிகள் பெரும் சங்கடப்படுகின்றனர். (12)

## காத்தான்குடியில் தாலிக்கொடி திருட்டு

(மட்டக்களப்பு)

காத்தான் குடியில தாலிக்கொடி ஒன்றைக் களவாடிக் கொண்டு சென்ற இரு இளைஞர்களை முஸ்லிம் மக்களும் விடுதலைப்புலிகளும் துரத்திப் பிடித்தார்கள் இவ்விருஇளைஞர்களும் முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்களென பின்னர் தெரியவந்தது. இவ்விரு இளைஞர்களும் மொட்டை அடிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர். இச்சம்பவம் முஸ்லிம்கள் மத்தியில் மேலும் விடுதலைப் புலிகள் மீதான நம்பிக்கையை வலுவடைய வைத்துள்ளது.

## தமிழ் சிறுகதைப் போட்டி

(பண்டத்தரிப்பு)

தமிழ்ச் சிறுகதைப் போட்டி ஒன்றை கல்வித் திணைக்கள ஊழியர்களின் பட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவு சிக்கனக் கடனுதவிச் சங்கம் (E. D. E. C. S.) முதன் முறையாக நடத்தவுள்ளது. இப்போட்டி மாவட்ட மட்டத்திலும், தேசியமட்டத்திலும் நடத்தப்படவுள்ளது.

வெற்றி பெறும் பத்துச் சிறுகதைகளை இலங்கை நூலக சபையைக் கொண்டு, இலங்கைச்சக் கூட்டுத்தாபனத்தின்அனுசரணையுடன் புத்தகமாக அச்சிட்டு விற்பனை செய்யவும் மேற்படி சங்கச் செயற் குழு ஒழுங்குகள் செய்துள்ளது.

இப்போட்டியில் பங்கு கொள்ளும் எழுத்தாளர்கள்தாம் எழுதும் சிறுகதைகளை மார்ச் 31ம் திகதிக்கு முன்னர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

தூய வெள்ள நிறமான மேசை உப்புத்தூள் (Table Salt) மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு, M. G. M. No. 777, K. K. S. Road, Jaffna. (B/66)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Prima Lohmann சிவப்பு வெள்ளை பேட்டுக் குஞ்சுகள், புறொயிலர் குஞ்சுகள் கறுப்பு, சிவப்பு சேவற் குஞ்சுகள், Golden comet Hylie Black பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன் கிழமைகளில் முன் கூட்டியே பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். Nallur Farm Centre 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (B-189)

### கவரிடுதல்

அடையாள அட்டைகளுக்கும் மற்றும் நாளாந்தம் கையாளும் ஆவணங்களுக்கும் சவர்ச்சியான பிளாஸ்டிக் கவரிட யாழ். நகரில் தனிச்சிறந்த ஸ்தாபனம் 'கிளீன் கட்'

### தேவை

அரிசி ஆலையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். உணவு தங்குமிட வசதி செய்து கொடுக்கபடும். K. S. R. K. மில்ஸ், G. P. S. லேன், கல்வியன்காடு. (B- 119)

Radio Tv, Air Conditioning-Refregeration வயறிங், வெல்டிங், வைன்டிங், Typing. Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

RAJZ BRAND எவசில்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிகள், டின்னர்


# யாழ். பல்கலைக்கழகத்தில் சர்வதேசமகளிர் ஆண்டு நிகழ்ச்சிகள்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு யாழ். பல்கலைக் கழகத்தில் நேற்று மூன்று இடங்களில் கருத்தரங்குகளும், கலைவிழாவும் நடைபெற்றன.

ஏராளமான பெண்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பெண்கள் அறிவாற்றலில், ஆளுமையில், வலுவாற்றலில் அவர்கள் ஆண்களுக்கு நிகராகவே இருக்கிறார்கள்.

ஈழப் போராட்டத்தில் பெண்களின் பங்கு அவசியமானதாகும். எம்மை நாமே பாதுகாப்பதற்கும், எமது சுதந்திரத்தை வென்றெடுப்பதற்கும் நாம் போராடத் தயாராக வேண்டும்.

யாழ். பல்கலைக் கழக மறுமலர்ச்சிக்கழகத்தால் நடத்தப்பட்ட கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசும்போது, செல்வி மீரா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பெண் விடுதலைப் பிரச்சினையில் ஆண்களைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தி வைத்து விசாரணை செய்ய முடியாது. எமது மனதில் மரபு வழியாக பதிந்துவிட்ட சில பழைய நம்பிக்கைகள் தான் பெண் அடிமைக்குக் காரணம். இதற்கு ஆண் மட்டு மல்ல; பெண்ணும் காரணமே.

மேற்படி கருத்தரங்கில் கலந்து கொண்டு உரையாற்றும் போது கம்பன் கழகத் தலைவர் இ. ஜெயராஜ் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் தொடக்கத்தில் போராட்டத்தில் ஈடுபட்டு வீரமரணமடைந்த 27 பெண் போராளிகளுக்கும் உண்ணாவிரதமிருந்து மரணமான அன்னை பூபதி அவர்களுக்கும் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது.

எங்கு சேவையாற்ற வேண்டும் என்பதை உணர்ந்து அங்கு மகளிர் சேவையாற்ற வேண்டும். மகளிர் தமது சிறந்த சேவையினால் மக்களை மேம்படுத்த வேண்டும்.

யாழ். மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவு சங்கங்களின் சமாசத்தின் மகளிர் குழுவினர் நடாத்திய மகளிர் தினவிழாவில் கலந்துகொண்டு ஆசியுரை ஆற்றும்போது, சிவத்தமிழ்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இவ்விழாவில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (தி)

## வேணுதாசுக்கு வரவேற்பு

(மட்டக்களப்பு)

இந்தியப்படை முகாமிலிருந்து விடுதலையான மாவட்ட தொழிற் சங்க சம்மேளன பொதுச் செயலாளர் சட்டத்தரணி பொன். வேணுதாஸ் மீண்டும் தனது பதவியை ஏற்றுக்கொண்டார்.

கடந்த வாரம் நடைபெற்ற சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்ட இவருக்கு பாராட்டும் கௌரவமும் வழங்கப்பட்டது.

பதில் தலைவர் திரு. கா. சின்னத்துரை தலைமையில் இப்பாராட்டு வைபவம் நடைபெற்றது. (37)

## வதந்தியை நம்பாதீர் விவசாயப் பணிப்பளர் அறிவுரை

(வவுனியா மார்ச் 7)

வவுனியா மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கை செய்வதற்கு விவசாயத் திணைக்களம் தடை விதித்து இருப்பதாகப் பரவலான வதந்தி பரவியுள்ளது. இவ் வதந்தியில் எதுவிதமான உண்மையும் இல்லையெனவும், அதிக வருமானம் தரும் இப் பயிர்ச் செய்கையைக் கைவிடவேண்டாம் எனவும் உதவி விவசாயப் பணிப்பாளர் அ. கிருஷ்ணர் வெளியிட்ட அறிக்கையொன்றில் பொது மக்களை வேண்டியுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மிளகாய்ச் செய்கை செய்வோர் தமக்கு வேண்டிய அறிவுரைகளைத் தமது திணைக்களத்தில் பெறலாம் என்றும் தெரிவித்துள்ளார். (31)


ஈழநாதம் நம்
மண்ணினதும் மக்களினதும்
விடுதலைச் சங்க நாதமாக ஒலிக்க
எமது வாழ்த்துக்கள்.

★ ★ ★

பிரபல வர்த்தகர்
கமிஷன் ஏஜென்ட்

லிங்கம்ஸ்

163 (27) கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.



யாழ்நகர மக்கள் இன்று அல்லாவின் கிருபையால்
தங்கள் கடைகளை திறந்து சந்தோஷ
முகத்துடன் வியாபாரம் செய்கின்றார்கள்
இது அல்லா தந்த பெரிய பாக்கியம்

GREEN GARDEN
No. 3, Jummah Mosque Road
Jaffna
தொலைபேசி 24152
T. Phone

வீடுகள், காரியாலயங்கள், கல்வி நிலையங்கள்,
கோவில்கள், பாடசாலைகள் ஆகியவற்றை பூக்களை கொண்டு அலங்கரிக்க வேண்டுமா?
நாடுங்கள்

கிறீன் கார்டின்
இல 3 உம்மா மொஸ்க் வீதி
யாழ்ப்பாணம்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனை செய்யப்படும்,
வடமாகான ஏக விநியோகஸ்தர்கள்
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. B 210



மறைந்த வீர வேங்கைகளுக்கு எமது வீர அஞ்சலி





## ஜனாதிபதி சட்டத்தரணிகள் 10பேர் மோதிலால் ஒருவர்

(கொழும்பு)

அரசியல் அமைப்பின் முப்பத்தி மூன்றாவது சரத்தின் படி ஜனாதிபதியின் அதிகாரத்தின் அடிப்படையில் பத்து ஜனாதிபதி சட்டத்தரணிகளை ஜனாதிபதி பிரேமதாஸா நியமித்துள்ளார்.

இவர்களில் ஒரு தமிழரும், ஒரு முஸ்லீமும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சட்டத்தரணி வீ. கே. மோதிலால் நேரு, சட்டத்தரணி மொகமட் அமீன் ஆகிய இருவருமே அவர்களாவர்.

## நெடுந்தீவுக்கு செஞ்சிலுவைச் சங்கம் உதவி

(தீவுப்பகுதி)

நெடுந்தீவுப்பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினையை ஓரளவு தீர்த்து வைக்கும் பெருட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் நானூறு கலன் நீர் கொள்ளக்கூடிய பவுசருடன் கூடிய மினி உழவு இயந்திரமொன்றை அன்பளிப்பாக அண்மையில் வழங்கியுள்ளனர் இவ் அன்பளிப்பைப் பெற்றுக் கொண்ட இப்பகுதி மக்கள் யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தினருக்கு நன்றி தெரிவிக்கின்றனர். (15)


78 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
கொடி பறக்குது
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.3
ரஜனி, ரூபினி. நடித்த
மனிதன்
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
நாயகன்
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
பூ- பூவா பூத்திருக்கு
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
ராஜாதி ராஜா
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு
வருஷம் 16
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா
அவள் ஒரு தொடர்கதை



எங்கள் தாயக மண்ணின்
கலை, கலாசார நாதமாக
ஈழநாதம் திகழ எமது வாழ்த்துக்கள்!

நீர்ப்பாசன இயந்திர
உதிரிப் பாகங்களை
[illegible]வும், நியாய விலையிலும்



வியாபாரம் பெருக
விளபரம் செய்க


## தீவுப்பகுதி மக்களின்

(B- 119)

Radio Tv, Air Conditioning-Refregeration வயறிங், வெல்டிங், வைன்டிங், Typing. Spoken English புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. சிறந்த செய்முறை அறிமுறைப் பயிற்சிகளுடன் அங்கீகரிக்கப்பட்ட Diploma சான்றிதழ் வழங்கப்படும். Vispa Engineering Aid-Hall, 328, Navalar Road, Jaffna. (B-203)

RAJZ BRAND எவசிர்ல்வர் பாத்திரங்கள் எங்கும் கிடைக்கும், உங்கள் விருப்பமே எங்கள் சேவை! பற்பல டிசைன்களில் பற்பல ரகங்கள்! சாப்பாட்டுப் பீங்கான்கள், செற் சட்டிகள், தாச்சிச் சட்டிகள், றேகள், சோஸ்பான்கள். பொரியல் சட்டிசள், டின்னர் செற்கள், ரீ செற்கள் கோவிற் சாமான்கள் இன்னும் பற்பல நம்பிக்கை நிதானம் RAJZ BRAND, பார்வை அறை S. A. தேவதாசன், சூராவத்தை, சுன்னாகம். (B-202)

## பயிற்சிக்கு 19பேர் தெரிவு

(மட்டக்களப்பு)

வட-கிழக்கு மாகாண சபையின் பட்டதாரிகள் பயிற்சித் திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் 19 பேர் நியமனம் பெற்றுள்ளனர்.

மட்டக்களப்பு செயலகம் மூலம் பயிற்சியளிக்கப் படுகிறது (37)

எங்கள் தாயக மண்ணின்
கலை, கலாசார நாதமாக
ஈழநாதம் திகழ எமது வாழ்த்துக்கள்!

நீர்ப்பாசன இயந்திர
உதிரிப் பாகங்களை
தரமானவும், நியாய விலையிலும்
பெற்றுக் கொள்ள....

## செல்வா ஹாட்வெயர்ஸ்

217, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(B/219)

## கிறீன் கார்டின்

இல 3 உம்மா மொஸ்க் வீதி
யாழ்ப்பாணம்

மொத்தமாகவும் சில்லறையாகவும்
விற்பனை செய்யப்படும்,

வடமாகான ஏக விநியோகஸ்தர்கள்
வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு. B 210

மறைந்த வீர வேங்கைளுக்கு எமது வீர அஞ்சலி




## றஹமத் ரெயிலேர்ஸ்

2, நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம்.

(B. 214)

## உதவி

(தீவுப்பகுதி)

நெடுந்தீவுப்பகுதி மக்களின் குடிநீர் பிரச்சினையை ஓரளவு தீர்த்து வைக்கும் பொருட்டு இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தினர் நானூறு கலன் நீர் கொள்ளக்கூடிய பவுசருடன் கூடிய மினி உழவு இயந்திரமொன்றை அன்பளிப்பாக அண்மையில் வழங்கியுள்ளனர் இவ் அன்பளிப்பைப் பெற்றுக் கொண்ட இப்பகுதி மக்கள் யாழ். செஞ்சிலுவைச்சங்கத்தினருக்கு நன்றி தெரிவிக்கின்றனர். (15)

(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10-30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா

## அவள் ஒரு தொடர்கதை

வியாபாரம் பெருக
விளபரம் செய்க

## தீவுப்பகுதி மக்களின் கண்ணீர் அஞ்சலி



## காண்டீபனுக்கு

புளியங்கூடல் சந்தி
வர்த்தக சங்கம்

எங்கள்
மனங்களுக்குள்
அந்த முகம் வந்து வந்து
போகிறது!
காண்டீபா!
இயமன் எப்படி எப்படி எல்லாம்
வருகிறான். . .
உன் மரணம்
இதயத்தின் ரணம்!
எம் நினைவுக் கல்லறையில்
உன் பெயர்
எழுதப்பட்டுவிட்டது!

R-127

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### இராசரத்தினம் வள்ளிப்பிள்ளை

தோற்றம்: 17-3-1938

மறைவு: 8-2-1990

திதி: 10-3-1990

எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி மீளாத் துயில் கொண்ட தெய்வமே, எம்மை அன்போடும் பண்போடும் வழி நடத்தி எமது வாழ்க்கைக்கு உறுதுணை புரிந்த உங்களை நினைவு கூரும் கணவன் இராசரத்தினம் பிள்ளைகள் சிவானந்தன் (ஜேர்மனி) கலானந்தன், திலக ரஞ்சனி, திசையானந்தன், (டென்மார்க்) கருணானந்தன், (ஜேர்மனி) சிவரஞ்சினி (ஜேர்மனி) செல்வரஞ்சினி.

மருமக்கள் குகலீலா, தவச்செல்வி, பேரப்பிள்ளைகள் சுஜீவ், சுஜீபனா, கஜந்தன், அஜந்தன்.

மட்டுவில் நாடு,
பூநகரி.

(B.125)

## 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 01 - 08 - 1945

மறைவு: 10 - 03 - 1986

### சின்னப்பு அலோசியஸ்

அன்பினால் பலர் உள்ளத்தை வென்றீர்
அடக்கத்தால் பல நண்பரைப் பெற்றீர்
பண்பினால் பலர் பாராட்ட வாழ்ந்தீர்

பாசத்தின் இருப்பிடமாய், குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே! உங்கள் இனிய நினைவுகளும் கனிவான பேச்சும் என்றும் எங்கள் இதயங்களில் மங்காமல் நிலைத்திருக்கும். உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

அன்பு மனைவி,
பிள்ளைகள், உற்றார்,
உறவினர்.

16/3, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

(R - 126)

## கொழும்பில் இசை அமுதம்

(உரும்பிராய்)

கலாசூர்யா நாதஸ்வர கலாநிதி அளவையூர் என். கே. பத்மநாதன் அவர்களின் மகள் செல்வி கனகாம்பரி(சென்னை அடையாறு கர்நாடக இசைக் கல்லூரி) அவர்களின் இன்னிசைக் கச்சேரி, கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் 11-03-90 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-00 மணிக்கு நிகழவுள்ளது. (32)

## நியமனம் குறித்து அமைச்சர் தகவல்

(கொழும்பு)

1987 ஜூலை முதல் 1989 டிசம்பர் வரை நியமிக்கப்பட்ட களஞ்சியப் பொறுப்பாளர்களில் ஆயிரத்து எழுனூற்றி அறுபத்தாறு சிங்களவர்களும் எழுபத்தேழு தமிழர்களும், முப்பத்திரண்டு முஸ்லிம்களும் இடம் பெற்றதாக பொது நிர்வாக உள்நாட்டு அமைச்சர் யூ பி.விஜயக்கோன் பாராளு மன்றத்தில்தெரிவித்தார்.

# காஷ்மீர் நிலைமை நேரில் காண

# சர்வகட்சி பிரதிநிதிகள் விஜயம்

(ஸ்ரீநகர்)
காஷ்மீரில் உள்ள தீவிரவாதிகள் தமது வன்முறைகளைக் கைவிட்டுவிட்டு அரசியல் நீரோட்டத்தில் கலந்துகொண்டால் அவர்களுடன் பேச்சு நடாத்தத் தயார் என தேசிய முன்னணி அரசும் எதிர்க்கட்சியான இந்திரா காங்கிரசும் அறிவித்துள்ளன.

மத்திய திட்ட அமைச்சர் திரு. தினேஷ் கோசுவாமியும், எதிர்க்கட்சித் தலைவர் திரு. ராஜீவ் காந்தியும் செய்தியாளரிடம் இதனைத் தெரிவித்தனர்.

காஷ்மீரின் நிலைமைகளை அறிய இவர்கள் அங்கு சென்றுள்ளனர். இவர்களுடன் துணைப்பிரதமர் தேவிலால், ரயில்வே அமைச்சர் ஜோர்ஜ் பெர்னான்டஸ் மற்றும் இந்திரா காங்கிரஸ் பாரதிய ஜனதா கட்சி, இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் தேசிய மாநாட்டின் பிரதிநிதிகளும் சென்றிருந்தனர்.

காஷ்மீரில் உள்ள பல அமைப்புக்கள், மக்கள் பிரதிநிதிகள் ஆகியோரைக் இக்குழுவினர் சந்தித்து பேசினர். காஷ்மீர் ஆளுநர் ஜக்மோகனும் இக்குழுவினரைச் சந்தித்துப் பேசினார்.

திரு ராஜீவ் காந்தி தங்கியிருந்த அறைக்கு முன்னால் பலர் கூடிநின்று ராஜீவ் காந்தியே திரும்பிப்போ எமக்கு சுதந்திரம் வேண்டும் என்று கூச்சலிட்டனர்.

## 10 பேர் சுட்டுக்கொலை

(புதுடில்லி)
பஞ்சாப்பில் இரவு நேரம் வாகனத்தில் சென்ற பத்துப் பேரை சீக்கிய தீவிரவாதிகள் சுட்டுக்கொன்றனர்.




காபூல் குற்றம்சாட்டுகிறது

## ஆப்கானிஸ்தான் சதிக்கு பாகிஸ்தான் நேரடித் தொடர்பு

(காபூல்)
ஆப்கானிஸ்தானில் இடம் பெற்ற புரட்சிச் சதிக்கு பாகிஸ்தான் நேரடியாக ஈடுபட்டதாக ஆப்கானிஸ்தான் குற்றம் சாட்டியுள்ளது.

இந்தப் புரட்சிக்குத் தலைமைவகித்த ஜெனரல் கனய் புரட்சி தோல்வியடைந்தால் பாகிஸ்தானுக்கு தப்பியோட பாகிஸ்தான் உளவுப் படையுடன் அவர் இரகசிய பேச்சு நடாத்தியதற்கான ஆதாரங்கள் தம்மிடம் இருப்பதாகவும் ஆப்கானிஸ்தான் குற்றம்சாட்டியுள்ளது,

இந்த குற்றச்சாட்டை பாகிஸ்தான் மறுத்துள்ளது டன் ஆப்கான் கிளர்ச்சிக்காரர்களுடன் ஜெனரல் கனய் தொடர்பு வைத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

சோவியத் உதவியுடன்

## ஈரானில் அணுசக்தி நிலையங்கள்

(தெஹ்ரான்)
சோவியத் ரஷ்யாவின் உதவியுடன் ஈரானில் இரு அணுசக்தி நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

இது தொடர்பான ஒப்பந்தம் ஒன்றில் ஈரானும், சோவியத் ரஷ்யாவும் கடந்த செவ்வாய்க்கிழமை கைச்சாத்திட்டன.

கடந்த காலங்களில் ஈராக் அணுசக்தியில் முன்னேறியிருப்பதால், ஈரானும் அதற்குச் சமமான நிலையை அடைவதற்காகவே இவ்வாறு இரு அணுசக்தி நிலையங்களை அமைக்கவுள்ளது.

செவிப்புலனேற்றார்

## உற்பத்திப் பொருட்களை வாங்கி ஊக்குவியுங்கள்

(யாழ்ப்பாணம்)
எமது நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை வாங்கி எம்மை ஊக்குவிப்பதன் மூலம், வேலையற்றோருக்கு வேலை வாய்ப்பு கிடைக்க வாய்ப்பு வழங்கப்படுகிறது. என்று யாழ்.செவிப்புலனற்றோர் புனர் வாழ்வு நிலைய அதிகாரி ஒருவர் விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தற்போது இதன் தொழில் நிலையம் கைதடியில் அமைந்துள்ளது என்றும் இதில் மில்க் ரொபி, சுவிங்கம் உட்பட பல இனிப்பு வகைகள் உற்பத்தி செய்யப்படுவதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுளது. (தி)

## மட்டுநகரமண்டபத்தில் நடனாஞ்சலி

(மட்டக்களப்பு)
மட்டக்களப்புப் பரதக் கலாலயம் வழங்கிய நடனாஞ்சலி நிகழ்ச்சி அண்மையில் நகரமண்டபத்தில்வட-கிழக்கு மாகாண கலாசாரப் பணிப்பாளர் திரு. எஸ். எதிர்மன்னசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

திருமதி சுபித்திரா கிருபாகரன் இக்கலாலயத்தை நிர்வகித்து வருகிறார்.

இவரது மாணவிகளால் வழங்கப்பட்ட நடன நிகழ்ச்சிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இசை, நடனத்துறையில் லரலாற்றுச் சாதனையாக அமைந்தன

பிரதம அதிதியாக மாவட்டப் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மகா வித்துவான் எப். எக்ஸ். ஸி. நடராசா, மாநகரசபை ஆணையாளர் திரு. கே.கார்த்திகேசு, தலைமைப்பீட உதவி அரச அதிபர் திரு. இரா. நாகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (37)

காஷ்மீர் பிரச்சினை அமெரிக்காவின் கருத்து

(வாஷிங்டன்)
காஷ்மீர் பிரச்சினைக்கு தேர்தல் நடாத்த வேண்டும் என்பதை தாம் ஆதரிக்கவில்லை என அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

சிம்லா ஒப்பந்தப்படி இந்தப் பிரச்சினையை பாகிஸ்தானும் இந்தியாவும் தீர்க்க வேண்டும் எனவும் அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் திரு. ஜோண்ஹெலி தெரிவித்தார்.

## இந்திரா காங்கிரஸ் தொண்டர் தமிழ் நாட்டில் கைதானார்கள்

(சென்னை)
தமிழ்நாட்டில் நேற்று இரவு தொடங்கவிருந்த ரயில் மறியல் போராட்டம் தொடர்பாக இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி கே. ராமமூர்த்தி மற்றும் மூன்று சட்டப்பேரவை உறுப்பினர்கள் உட்பட மூவாயிரம் பேர் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சென்னையில் சுமார் முன்னூறு பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

மறைமலை நகர் ரயில் நிலையத்திற்கு காமராஜரின் பெயரை வைக்க வேண்டும் என இந்திரா காங்கிரஸ் கட்சி விடுத்த வேண்டுகோளை தமிழக அரசு நிராகரித்ததாலேயே இந்த மறியல் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

## நேபாளத்தில் பெண்கள் போராட்டம்

சர்வதேச மகளிர் தினமான நேற்று முன்தினம் நேபாளத்தில் பெண்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் செய்தனர்.

பெண்கள் மீது மனித உரிமைகள் மீறப்படுவதாக இவர்கள் கோரிக்கை விடுத்தனர் இவர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

## சார்க் மகாநாடு எப்போது?

(கொழும்பு)
தெற்காசிய பிராந்திய உச்சி மாநாடு (சார்க்) இலங்கையில் நடைபெறுவது பற்றி பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இலங்கை வந்த பின்னரே முடிவு தெரியுமென அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா நேற்று செய்தியாளரிடம் கூறினார்.

அவருடன் பேசிய பின்னர் மகாநாடு நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

## ஜனசக்திக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)
யா.43 கிராம சேவகர் பிரிவில் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் உதவிபெறும் குடும்பங்கள் கடனுதவி, தொழிற்பயிற்சி பெறுவதற்கு வழி வகைகள் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கும், நாளை காலை 10 மணிக்கும் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும் இக் கூட்டங்களுக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் தலைமைவகிப்பார்.

இன்றும் நாளையும்

## அகில இலங்கை இந்துசமயப் போட்டி

(பருத்தித்துறை)
இந்துசமய, கலாசார அலு... போட்டிகள் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு

# அட்டூழியங்களினால் சிதைந்த வடமராட்சிக்கு

# யூ. எஸ். குழு விஜயம்

மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரக் கல்லூரிகளையும் பார்வையிட்டனர்.

வல்வெட்டித்துறைக்கும் சென்று பார்த்தது. வல்வெட்டித்துறையில்

காஷ்மீர் பிரச்சினைக்கு தேர்தல் நடாத்த வேண்டும் என்பதை தாம் ஆதரிக்கவில்லை என அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

சிம்லா ஒப்பந்தப்படி இந்தப் பிரச்சினையை பாகிஸ்தானும் இந்தியாவும் தீர்க்க வேண்டும் எனவும் அமெரிக்க வெளியுறவு துணை அமைச்சர் திரு. ஜோண்ஹெலி தெரிவித்தார்.

தமிழ்நாட்டில் நேற்று இரவு தொடங்கவிருந்த ரயில் மறியல் போராட்டம் தொடர்பாக இந்திரா காங்கிரஸ் தொண்டர்கள் மூவாயிரம் பேர் கைது செய்யப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் வாழைப்பாடி கே. ராமமூர்த்தி மற்றும் மூன்று சட்டப்பேரவை உறுப்பினர்கள் உட்பட மூவாயிரம் யப்பட்டனர். சென்னையில் சுமார் முன்னூறு பேர் வரை கைது செய்யப்பட்டனர்.

மறைமலை நகர் ரயில் நிலையத்திற்கு காமராஜரின் பெயரை வைக்க வேண்டும் என இந்திரா காங்கிரஸ் கட்சி விடுத்த வேண்டுகோளை தமிழக அரசு நிராகரித்ததாலேயே இந்த மறியல் போராட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

## நேபாளத்தில் பெண்கள் போராட்டம்

சர்வதேச மகளிர் தினமான நேற்று முந்தினம் நேபாளத்தில் பெண்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலம் செய்தனர்.

பெண்கள் மீது மனித உரிமைகள் மீறப்படுவதாக இவர்கள் கோரிக்கை விடுத்தனர் இவர்கள் பொலிசாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

(கொழும்பு)

தெற்காசிய பிராந்திய உச்சி மாநாடு (சார்க்) இலங்கையில் நடைபெறுவது பற்றி பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் இலங்கை வந்த பின்னரே முடிவு தெரியுமென அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா நேற்று செய்தியாளரிடம் கூறினார்.

அவருடன் பேசிய பின்னர் மகாநாடு நடைபெறும் திகதி அறிவிக்கப்படும் எனவும் அமைச்சர் கூறினார்.

(யாழ்ப்பாணம்)

யா.43 கிராம சேவகர் பிரிவில் ஜனசக்தித் திட்டத்தின் கீழ் உதவிபெறும் குடும்பங்கள் கடனுதவி, தொழிற்பயிற்சி பெறுவதற்கு வழி வகைகள் செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று மாலை 4 மணிக்கும், நாளை காலை 10 மணிக்கும் யாழ். வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெறும் இக் கூட்டங்களுக்கு யாழ். உதவி அரசாங்க அதிபர் தலைமைவகிப்பார்.

யாக அமைந்தன

பிரதம அதிதியாக மாவட்டப் பிரதி கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் கலந்து கொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக மகா வித்துவான் எப். எக்ஸ். ஸி. நடராசா, மாநகரசபை ஆணையாளர் திரு. கே. கார்த்திகேசு, தலைமைப்பீட உதவி அரச அதிபர் திரு. இரா. நாகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (37)

## இன்றும் நாளையும்

## அகில இலங்கை இந்துசமயப் போட்டி

(பருத்தித்துறை)

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நடாத்தப்படும் அகில இலங்கை ரீதியான இந்து சமயப் போட்டிகள் இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும் நடைபெறுமென, இந்து சமயக் கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். இப்போட்டிகளில் பங்குபற்ற விண்ணப்பித்த சகல மாணவர்களுக்கும் அனுமதிப் பத்திரங்கள் தனித் தனியே அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. விண்ணப்பித்தும் அனுமதிப் பத்திரங்களைப் பெறத் தவறியவர்களை அவ்வப்பகுதி பரீட்சை ஸ்தானங்களுக்குச் சமூகமளிக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிகள் மேற்பிரிவு, மத்திய பிரிவு, கீழ்ப் பிரிவு என மூன்று பிரிவாகப் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி, பண்ணிசைப்போட்டிகள் நடாத்தப்படவுள்ளன. மேற்பிரிவு பேச்சுப்போட்டி 8 நிமிடமும், மத்திய பிரிவு பேச்சுப்போட்டி 6 நிமிடமும், கீழ்ப்பிரிவு பேச்சுப்போட்டி 4 நிமிடமும் நடைபெறவுள்ளன.

பேச்சு, பண்ணிசைப்போட்டிகளுக்கான இறுதிப்போட்டிகள் கொழும்பில் நடைபெறும். கொழும்பில் நடைபெறவுள்ள இந்து சமய விழாவின்போது பரிசில்கள் மாகாண ரீதியிலும், அகில இலங்கை ரீதியிலும் வழங்கப்படவுள்ளன. (25)

## அட்டூழியங்களினால் சிதைந்த வடமராட்சிக்கு

## யூ. எஸ். குழு விஜயம்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் இராணுவ அட்டூழியங்களினால் பாதிப்படைந்து சீரழிந்துள்ள பகுதிகளைப் பார்வையிடுவதற்கு யூ. எஸ். உதவி வீடமைப்பு அபிவிருத்தித் திட்ட வல்லுநர் செல்வீ கமலினி, வை. பாலசூரியா தலைமையிலான குழுவொன்று வந்திருந்தது.

இக் குழுவில் சர்வதேச அபிவிருத்தி புனரமைப்பு நெறிப்படுத்தல் ஆலோசகர் திரு. கே. சிவநாதன் யாழ். மாவட்ட புனரமைப்பு இணைப்பு அதிகாரிகளான, திரு. எஸ். பரமநாதன் திரு. கே. சற்குணலிங்கம் யாழ். மாவட்ட உதவித் திட்டமிடல் பணிப்பாளர் திரு. என். பாலகிருஷ்ணன் ஆகியோர் அங்கம் வகித்தனர். இங்கு வருகைதந்த அதிகாரிகள் குழுவினரைப் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர். திரு. வை. வேலும்மயிலும், பருத்தித்துறை பிரஜைகள் குழுத் தலைவர் திரு. எஸ். விகாசுசுந்தரம் செயலாளர் திரு. வீ. எஸ். மகேஸ்வரன் திரு. எஸ். தங்கவேலாயுதம். திரு. எஸ். காந்திதாசன் எஸ். துரைராஜா ஆகியோரடங்கிய குழு வரவேற்று பருத்தித்துறைப் பிரதேசப் பகுதிகளின் சீரழிவு நிலைகளைக் காட்டி விளக்கமளித்தது. உயரதிகாரிகள் குழு இப் பகுதிகளின் சீரழிவு நிலைகளைப் பார்வையிட்டு ஆச்சரியமடைந்தனர்.

பருத்தித்துறை நகரைச் சுற்றிப் பார்வையிட்ட அதிகாரிகள் பருத்தித்துறை கொட்டடி சித்தி விநாயகராலயம் சீரழிந்திருப்பதைப் பார்வையிட்டு மிகக் கவலையடைந்தனர். பருத்தித்துறைஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரக் கல்லூரிகளையும் பார்வையிட்டனர்.

புலோலி கருசும்பனதுறையா மூலைப் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள 60 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு வரும் வீடமைப்புத் திட்டத்தையும் பார்வையிட்டு இவ் வீடமைப்புத் திட்டத்தை வெகு விரைவில் பூர்த்தியாக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் உறுதியளித்தனர். குழுவினர் பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலைக்கும் விஜயம் செய்தனர்.

வல்வெட்டித்துறைக்கும் சென்று பார்த்தது

வல்வெட்டித்துறையில் இராணுவ நடவடிக்கைகளினால் சீரழிந்துள்ள பகுதிகளையும் இவர்கள் பார்வையிட்டு அறிக்கை தயாரித்துக் கொண்டனர். அப் பகுதிகளில் உள்ள மக்களுடன் அங்கு இடம்பெற்ற வன் செயல்கள் பற்றியும் கலந்துரையாடினர். கரவெட்டிப் பகுதி, உடுப்பிட்டிப் பகுதிக்கும் இவ் அதிகாரிகள் குழு விஜயம் செய்தது.

## முஸ்லிம் மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள முஸ்லிம் பிரதேசங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிக்கு ஆதரவு பெருகி வருவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

ஏறாவூர், ஓட்டமாவடி, வாழைச்சேனை காத்தான்குடி ஆகிய இடங்களில் சிற்றூர் கிளைகள் அமைக்கப்பட்டு கருத்தரங்குகளும் நடைபெறுகின்றன.

காத்தான்குடியில் பகிரங்க பொதுக்கூட்டம் நடைபெற வேண்டும் என அண்மையில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தலைவர்களிடம் காத்தான்குடி பிரமுகர்கள் நேரடியாக கோரிக்கை விடுத்தனர்.

தமிழீழவிடுதலைப் புலிகள் மீது முஸ்லிம் மக்கள் நம்பிக்கையுடன் இருப்பதாகமுஸ்லிம் சிரேஷ்ட அரசியல்வாதியொருவர் தெரிவித்தார். (37)

## நாளை வெளியீடு

திரு. துரைசிங்கம் ரகு அவர்களால் எழுதப்பட்ட ''வங்கியியல் சட்டமும் நடைமுறைகளும் பகுதி இரண்டு'' என்ற நூலின் வெளியீட்டு விழா எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை காலை 9-30 மணியளவில் மானிப்பாய் மகளிர் கல்லூரி மண்டபத்தில் சட்டத்தரணி க. குணரத்தினம் தலைமையில் நடைபெறும். திரு. ஆர். அருளானந்தன் பிரதம விருந்தினராகக்கலந்து கொள்வார். சட்டத்தரணி பொன். பூலோகசிங்கம் நூலின் ஆய்வுரையை மேற்கொள்வார்.

## மட்டக்களப்பில் நெல் விலை வீழ்ச்சி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக வேளாண்மை அறுவடை தற்போது நடைபெற்று வருகின்றன.

நெல் சந்தைப்படுத்தும் சபையினால் நெல் கொள்வனவு மேற்கொள்ளப்படாத நிலையில் தனியார் போட்டி போட்டு நெல் கொள்வனவு செய்கிறார்கள்.

பெரும்போக வேளாண்மை அறுவடை காரணமாக 1 கிலோ நெல் ரூபா 6 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதே நேரம் ரூபா 18 க்கு விற்பனையான ஒரு கொத்து அரிசி ரூபா 15 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. (37)

## வாழ்க்கைச்செலவு குறைய பெண்களின் பங்கு மிகஅவசியம்

ஜனசக்திதிட்டத்தில்முதலாவது தொகுதியில் ஒரு லட்சத்து அறுபத்தாறாயிரம் குடும்பங்கள் சேர்க்கப்பட்டுள்ளன. எழுபதுலட்சம் மக்களுக்கு ஜனசக்தி அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு ஜனாதிபதிபிரேமதாசா கண்டியில் நடைபெற்ற சர்வதேச மகளிர் தின வைபவம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

தனியார் துறையினரும், தனிப்பட்டவர்களும் ஜனசக்தி உதவி பெறுவோரை உற்பத்தி சார்பான தொழில்களில் ஈடுபடுத்த உதவியுள்ளனர் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

தொடர்ந்துபேசிய ஜனாதிபதி இலங்கைவங்கி, மக்கள் வங்கி என்பன கிராமிய மட்டத்தில் ஜனசக்திக்காக பல திட்டங்களைமேற்கொண்டுள்ளன.

வாழ்க்கைச்செலவு அதிகரித்து வருவதால் அதனைக் குறைப்பதற்குச் சுகாதாரபராமரிப்பு நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்ய உதவும் வகையில் உற்பத்தியைப் பெருக்க மகளிர்கள் ஒன்றிணைந்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## பாலர் ஆசிரியர் பயிற்சி நெறி

(உருப்பிராய்)

மேற்படி பயிற்சி பருத்தித்துறையில் போரூட் நிறுவனத்தினரால்ஆரம்பிக்கப்படுகிறது. தொடர்ந்து ஐந்துநாட்கள் இப்பயிற்சி நடைபெறும். இப்பயிற்சியில் பங்குபற்ற விரும்புபவர்கள் கொட்டடி 23, சிவன்பண்ணை வீதியில் உள்ள யாழ். மாவட்ட சனசமூக நிலைய சமேளன கரியாலயத்தில் தொடர்புகொள்ளவும். பாலர்பாடசாலை நடாத்தும் ஆசிரியர்கட்கும், பாலர் பாடசாலை நடாத்துவதற்கு ஆர்வம் உள்ளவர்கட்கும் இப் பயிற்சி வளங்கப்படுகின்றது. (32)

## ஈச்சமோட்டையில் புதிய தையல் பயிற்சி நிலையம்

பிள்ளைகளைப் பெறுவது கஸ்டமான ஒரு செயலாக இருந்தாலும்,பெற்ற பிள்ளைகளை பேணிபாதுகாத்து உரிய காலத்தில் உரியவற்றைச் செய்து. சமூகத்தில் நாலு பேர் மெச்சத்தக்கவிதத்தில்வளர்த்தெடுப்பது தான் மிகவும் கஸ்டமான தொன்றாகும். ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய், என்பதற்கிணங்க எத்தனையோ கஸ்டங்களை சாதுரியமாக சமாளித்து தையல்பயிற்சி நிலயைம் என்ற இக் குழந்தையைபெற்றெடுத்துள்ளோம் அதன் எதிர்காலம் உங்கள் கையில் தான் இருக்கிறது. அதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து எல்லோரும் மெச்சத் தக்க வகையில் ஒளி வீசும்பொழுதுதான்இந் நிலையத்தை உருவாக்க உழைத்தவர்கள் உண்மையில்மகிழ்வார்கள்.

இவ்வாறு ஈச்சமோட்டை சன சமூக நிலையம், அரசாங்க தொழில் திணைக்களத்தின் அனுசரணையுடன் அண்மையில் ஈச்சமோட்டையில் ஆரம்பித்த தையல் பயிற்சி நிலைய தொடக்க விழாவில் ஆரம்ப உரை நிகழ்த்திய கப்ரின்டீ. ஏ. எம். குணசிங்கம் குறிப்பிட்டார்.

இவ்வைபவத்தில் யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு சபாபதிப்பிள்ளை கலந்து கொண்டு மங்கள விழக்கேற்றி நாடாவை வெட்டி தையல் பயிற்சி நிலையத்தை திறந்து வைத்தார்.

வட மாகாண தொழில் திணைக்கள உதவி ஆணையாளர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பெயர்ப் பலகையைதிரைநீக்கம்செய்து உரையாற்றினார்.

அவரைத் தொடர்ந்து ஈச்சமோட்டைகிராமசேவகர்திரு. ஏ.சுந்தரலிங்கம், தொழில் திணைக்கள உத்தியோகஸ்தர் திரு.பசுபதி ஆகியோரும்உரை நிகழ்த்தினார்கள்

ஈச்சமோட்டை சன சமூக நிலைய இணைச் செயலாளர் திரு சச்சி தவசீலன், நன்றியுரை வழங்கினார்.

# ஹாட்லியை யாழ். இந்து இன்னிங்சால் வென்றது

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். இந்துக் கல்லூரிக்கும் ஹாட்லிக் கல்லூரிக்கும் இடையில் நடைபெற்ற சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் யாழ். இந்துக் கல்லூரி இனிங்சால் வெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ். இந்துக் கல்லூரி 8 விக்கெட் நஷ்டத்திற்கு 199 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது. ஜெயராஜ் 57. கோபிராஜ் 45, கபிலன் 18, நரேந்திரன் 17 ஓட்டங்களை பெற்றனர்.

செந்தில்குமரேசன், அன்பழகன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

ஹாட்லிக் கல்லூரி தனது முதல் இனிங்சில் 41 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுள்ளது. ஜீவமுகுந்தன் 17 ஓட்டங்களைப் பெற்றார். நரேந்திரன். பிரபாகரன் இருவரும் தலா 4விக்கெட்டுகளைக்கைப்பற்றினர்.

தொடர்ந்து அடிய ஹாட்லிக் கல்லூரி 105 ஓட்டங்களைப் பெற்றது. ராஜகோபன் 28, சிவகுமாரன் 23, சதீஸ் 17 ஓட்டங்களைப் பெற்றனர். பிரதீபன் மிகவும் சிறந்த முறையில் பந்துவீசி, 6 விக்கெட்டுகளையும், சசிசேகரன் 3 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். இப்போட்டிக்கான சிறந்த பந்து வீச்சாளருக்கான சுற்றுக்கிண்ணத்தை பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர், அன்பளிப்பு செய்திருந்தனர்.

இக்கிண்ணத்தை யாழ். இந்துக் கல்லூரியின் பிரதீபன் பெற்றுக்கொண்டார். (42)

## உடற்பயிற்சிப் போட்டி முடிவுகள்

(யாழ். விளையாட்டு நிருபர்)

யாழ். கோட்டக்கல்விப் பிரிவில் நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டியில் பெண்கள் பிரிவில் மூன்று பிரிவுகளிலும் வேம்படி மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றது.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தில் இந்தப் போட்டி ''ஷப்ரா'' வின் சுழற்கிண்ணங்களுக்காக நடைபெற்றது.

பெண்கள் பிரிவில் கீழ்ப் பிரிவு, மத்தியபிரிவு, உயர் பிரிவு ஆகியவற்றில் வேம்படி மகளிர் கல்லூரி முதலிடம் பெற்றுள்ளது.

யாழ். மாவட்டத்தில் சகல கோட்டங்களிலும் முதலிடம் பெறும் பாடசாலைகள் பங்குபற்றும் இறுதிப்போட்டி எதிர் வரும் 15ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ். கல்வித் திணைக்கள உடற்பயிற்சிப் பிரிவு ஏற்பாடுகளைச் செய்துள்ளது. (42)

# மத்திய கல்லூரியிடம் மானிப்பாய் இந்து தோல்வி

(யாழ். விளையாட்டு நிருபர்)

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கும் யாழ். மத்திய கல்லூரிக்கும் மிடையில் நடைபெற்ற சினேக பூர்வமான கிரிக்கெட் போட்டியில் யாழ். மத்திய கல்லூரி மிகவும் சிறப்பாக விளையாடி 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

யாழ். மத்திய கல்லூரியின் அணித் தலைவர் முகுந்தன் இப்போட்டியில் தனது திறமையான துடுப்பெடுத்தாட்டத்திலும், பந்து வீச்சிலும் முன் நோக்கிச் சென்றமை இவ்வெற்றிக்கு காரணமாக அமைந்துள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்துக்கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து மொத்தம் 65 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. ஜெயகாந்தன் மாத்திரம் 17 ஓட்டங்களைப் பெற்றார்.

யாழ். மத்திய கல்லூரி வீரர் முகுந்தன் 13 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளை கைப்பற்றினார். பி.ஜிட் 22 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

யாழ். மத்திய கல்லூரி தனது முதலாவது இன்னிங்சில் 65 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. இதில், முகுந்தன் 16 ஓட்டங்களைப் பெற்றார். திலகராஜ் 5 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார். பாஸ்கரன் 15 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.

மானிப்பாய் இந்துக் கல்லூரி தனது இரண்டாவது இன்னிங்சில் 70 ஓட்டங்களை பெற்றுள்ளனர். சிறிகுமார் 17 ஓட்டங்களைப் பெற்றார். முகுந்தன் 32 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்டுகளை கைப்பற்றினார். நகுதாஸ்ள ஓட்டங்களைக் கொடுத்து விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். அருனோதயன் 6 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளைகைப்பற்றினார். எஸ் ஜிட் 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

யாழ். மத்திய கல்லூரி தனது 2-வது இனிங்சில் 2 விக்கெட் நஷ்டத்திற்கு 71 ஓட்டங்களைப் பெற்றனர். யாழ் மத்திய அணித்தலைவர் 29 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளார். பி. ஜிட் 31 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றுள்ளார். ஜெயகாந்தன் 14 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டை கைப்பற்றினார். ராஜசூரி 6 ஓட்டங்களைக் கொடுத்து 1 விக்கெட்டை கைப்பற்றினார்.

## இலங்கை வங்கியின் விசா கார்ட் கருத்தரங்கு

இலங்கை வங்கி அறிமுகப் படுத்தியுள்ள விசா கார்ட் திட்டம் நாடு முழுவதும் வெற்றிகரமாக நடைமுறைப் படுத்தப்பட்டு வருவதால் அதன் நன்மைகள், நடைமுறைப்படுத்துதல் என்பன பற்றி ஒரு கருத்தரங்கு இன்று சனிக்கிழமை மாலை3மணிக்கு ஹொட்டல் ஞானம்ஸ் மேல் மாடியில் நடைபெறவுள்ளது.

## கிழக்கில் நெடுமாறன்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களின் பல்வேறு பகுதிகளிலும் சுற்றுப் பிரயாணம் மேற்கொண்டுள்ள தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன். அங்கு பல சமயத் தலைவர்களையும் சந்தித்துப்பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார். இவர் இராம கிருஷ்ணமிசன் சுவாமிகள், பிசப், மௌலவிகளைச் சந்தித்துப் பேசினார். முஸ்லிம் மக்கள் வாழும் பல கிராமங்களுக்கும் பிரயாணம் செய்துள்ளார். நெடுமாறன் விடுதலைப் புலிகளிடம் முஸ்லிம் மக்கள் பெருமளவில் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## காணாமற்போனவர்கள் விடயத்தில் நடவடிககை

(வவுனியா மார்ச் 7)

கடந்தகால வன்செயல்களினால் கணவனை இழந்த கைம்பெண்கள் இம் மாவட்டத்தில் அதிக தொகையினராக உள்ளனர். இவர்கள் காணாமல் போய்விட்டதால் இறந்ததாகக் கருத முடியவில்லை. இதனால் இக் குடும்பங்கட்கு நிவாரணம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது, என ஈழநாதம் செய்தி வெளியிட்டது தெரிந்ததே!

இவ் விடயத்தில் தாம் அக்கறைகொண்டிருப்பதாக


"தமிழ் மணம் கமழ தவழ்ந்து வரும் ஈழநாதமே! உன் சேவை நீடிக்கட்டும் புகழ் எங்கும் பரவட்டும்"

மணம்! குணம்! நிறைந்த!

மயூரன்ஸ் பீடா

உங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண பிறந்த தின விழாக்களுக்கான பீடா தேவைகளை பூர்த்தி செய்ய நாடவேண்டிய இடம்

மயூரன்ஸ் பீடா
232, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

மெண்டிஸ் உற்பத்தி மதுபானப் பொருட்களுக்கு
யாழ் -- கிளிநொச்சி மாவட்டம்
ஏக விநியோகஸ்தர்கள்

பிரண்டி, விஸ்கி, வையின்
பியர், சாராயம் ஆகியவற்றிற்கு

வாமாஸ்
121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B-211)

விஜயா ஸ்ரோர்ஸ்
64, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான டொபி, பிஸ்கட் போன்றவையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் மலிவான விலையில்

நம்பிக்கையின் சின்னம்

பிரண்டி, விஸ்கி, வையின்
பியர், சாராயம் ஆகியவற்றிற்கு

# வாமாஸ்

121/2, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

(B-211)

நம்பிக்கையின் சின்னம்

## பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

தினசரி மாலை சொகுசு ஆசனங்களைக் கொண்ட பஸ்
நம்பிக்கையுடன் உங்கள் பிரயாணத்தை தடையின்றி
கொண்டுபோய் சேர்க்கும் ஸ்தாபனம்

யாழ்நகரில்

# பிள்ளையார் ஸ்ரோர்ஸ்

மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.

❋ ரிக்கட்டுக்களை முன்கூட்டி பதிவுசெய்து கொள்ளவும். ❋

(B 215)

கிராமங்களுக்கும் பிரயாணம் செய்துள்ளார். நெடுமாறன் விடுதலைப் புலிகளிடம் முஸ்லிம் மக்கள் பெருமளவில் நம்பிக்கை கொண்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

### காணாமற்போனவர்கள் விடயத்தில் நடவடிகககை

(வவுனியா மார்ச் 7)

கடந்தகால வன்செயல்களினால் கணவனை இழந்த கைம்பெண்கள் இம் மாவட்டத்தில் அதிக தொகையினராக உள்ளனர். இவர்கள் காணாமல் போய்விட்ட.தால் இறந்ததாகக் கருத முடியவில்லை. இதனால் இக் குடும்பங்கட்கு நிவாரணம் வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது, என ஈழநாதம் செய்தி வெளியிட்டது தெரிந்ததே!

இவ் விடயத்தில் தாம் அக்கறைகொண்டிருப்பதாக நேற்று வவுனியா மாவட்டப் பதிவாளர் தி. இராசையா ஈழநாதம் நிருபருக்குத் தெரிவித்தார்.

செட்டிகுளத்தில் காணமல் போய்விட்ட 53 குடும்ப அங்கத்தவர்கட்கும், சேமமடுவில் காணாது போய்விட்ட 33 பேரின் விடயத்திலும், இறப்புப் பதிவுகளைக் கொடுப்பதில் தாம் சட்டநடவடிக்கைகளை முடுக்கி விட்டுள்ளதாகவும் அவர் நேற்று கூறினார்.

### காண்டீபனுக்கு அஞ்சலி

(சுதுமலை)

தாவடி, சுதுமலை, மானிப்பாய், ஆனைக்கோட்டைப் பகுதிகள் அனைத்து வீதிகளிலும் வாழைகள் தோரணங்கள் கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டு மறைந்த வீர இளைஞன் காண்டீபனுக்கு மக்களினால் கண்ணீர்அஞ்சலி செலுத்தப்பட்டது.

சோக கீதங்கள் இசைக்கப்பட்டுக்கொண்டிருந்தஇப்பகுதிகளில் உள்ள கடைகள்யாவும் பூட்டப்பட்டுக்கறுப்புக் கொடிகள் கட்டப்பட்டிருந்தன. பாடசாலை மாணவர்கள் கறுப்புப் பட்டிகள் அணிந்தபடி பாடசாலைகளைப் பகிஷ்கரித்து வீட்டுக்கு திரும்பினார்கள். (19)

232, பருத்தித்துறை வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்

## விஜயா ஸ்ரோர்ஸ்

64, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

சகலவிதமான டொபி, பிஸ்கட்
போன்றவையும் மொத்தமா
கவும் சில்லறையாகவும்
மலிவான விலையில்
நீங்கள் பெற்றுக்
கொள்ளவேண்டிய இடம்

விஜயா ரேடஸ்

(B-197)

ஈழநாதமே நீ பல பக்கங்களுடனும்
வார மலராகவும் வெளிவந்துகொண்டே
இருக்க வேண்டுமென வாழ்த்துவதோடு
அண்மையில் விபத்துக்குள்ளாகி
அகால மரணமடைந்த

மேஜர் காண்டீபனுக்கு
எமது வீர அஞ்சலி

மீன்பிடி உபகரணங்கள், நைலோன் வலைகள்,
நூல்கள். கொருலோன் வலைகள், நூல்கள்,
மலிவாக விற்பனை செய்யும் இடம்

## சமுத்ரா ரேட்ஸ்

46, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.

அன்ரனா அமைத்துக்கொடுப்பது, றேடியோ, T.V, பழுதுபார்த்தல் மணிக்கூடுகள் திருத்திக் கொடுப்பவர்கள்,
பழைய அன்ரனாக்கள் மறுசிரமைத்தல் போன்றவற்றிற்கு

## நியு வீனஸ்

றெக்கோடிங் அன் வாச் வேக்ஸ்
60, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## NEW VENUS

RECORDING & WATCH WORKS
60, STANLEY ROAD,
JAFFNA.

B-218

சிந்தனைக்கு

உள்ளத்தில் உண்மையொளி உண்டாயின்
வாக்கினிலே ஒழியுண்டாகும்.

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 10 - 03 - 90


# கவின்கலைக் கல்லூரி

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் விபுலானந்தர் இசைக்கல்லூரியொன்று ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இராமநாதன் நுண்கலைக்கல்லூரி இயங்கி வருகிறது.

யாழ்ப்பாணமும் மட்டக்களப்பும் இருபெரும் நகரங்கள். கல்விமான்கள், கலைஞர்கள், இசை வல்லுனர்கள் பலரையும் பெற்றெடுத்த பெருமை யாழ்ப்பாணத்துக்கும் மட்டக்களப்புக்கும் உண்டு.

காடாய்க் கிடந்து இன்று கழனியாகக் காட்சியளிக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் இன்று ஆரம்பமாகும். கவின்கலைக்கல்லூரி ஈழத்தின் வரலாற்றிலேயே புதியதொரு அத்தியாயத்தைப் படைக்கிறது.

''1950 ஆம் ஆண்டு முதல் திட்டமிட்ட குடியேற்றத் திட்டங்கள் மூலம் குளம் அண்டிக் குடி கொண்டோரால் வளம் நிறைந்த பூமியாக வளர்வு கண்ட கிளிநொச்சி மாவட்டம் முதன் முதலாக கலைக்கதிர் சொரியும் கவின்கலைக்கல்லூரி ஒன்றை தன்னகத்தே இன்று பெறுகிறது. தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவு தன் முதன்மைக் கவனத்தை இச் சேவை அவசிய தேவையாக உள்ள திசையில் செறியச் செய்ததின் விளைவேயாகும்'' என்று நேற்று 'ஈழநாதம்' வெளியிட்டிருந்த கட்டுரையில் ப. வை. ஜெயபாலன் சரியாகக் குறிப்பிட்டிருந்தார்.

கிளிநொச்சி இன்னமும் வெறும் காடுதான், வரண்ட பிரதேசம் என்று இப்பொழுதும் சிலர் கூறுவதுண்டு.

கிளிநொச்சி மாவட்டமும் இதை அண்டிய வன்னிப் பிரதேசங்களும் பல வீரர்களைப் பெற்றெடுத்தது மட்டுமல்லாமல் பல கலைஞர்களையும் உருவாக்கிய பகுதியாகும்.

அந்நியப்படை எடுப்புக்களால் ஒரு தேசிய இனத்தின் கலை, கலாசாரம் சீரழிந்து போவது வரலாறு கண்ட உண்மை. ஈழத்திலும் போராட்ட சூழ்நிலையில் போதைவஸ்துப் பாவனையும் பாலியல் சீர்கேடுகளும் நமது இனத்தையும் வெகுவாகப் பாதித்துவிட்டது.

இந்நிலையில்தான் பாதை மாறிய பயணங்களை

## ஒரு கண்ணோட்டம்

# ஈழ மண்ணில் இந்திய இராணுவம்

1987 ஒக்ரோபர் 10ஆம் திகதி ஆரம்பமான இந்தியா விடுதலைப் புலிகள் யுத்தம் இரண்டு வருடங்கள் நீடித்தது. இந்திய இராணுவம் மேற்கொண்ட மற்றெல்லா யுத்தங்களையும் விட, இந்த யுத்தம் ஒரு நீண்டகால யுத்தமாகும். தவறாக வழி நடத்தப் பட்ட இந்தத் துணிகரச் செயலினால் இந்தியா தன் தோற்றத்தை உலக அரங்கில் மங்க வைத்ததோடு, இந்திய இராணுவமும் அதன் மதிப்பை இழந்தது. எனத்துறை சார்ந்த நிபுணர்கள் கருதுகிறார்கள். இந்திய இராணுவம் அதன் செல்வாக்கை இழந்ததற்கும் முஸ்லிம், தமிழ் மக்களால் வெறுக்கப்பட்டதுக்குமான காரணங்கள் யாவை? இந்திய இராணுவத்தை இழிவு படுத்தும் இந்த மாற்றங்களுக்குக் காரணம் யாது? பலம் வாய்ந்த இராணுவ அமைப்புடன், இலட்சக் கணக்கில் துருப்புக் ளைக் குவித்துவைத்திருந்த இந்தியா, யுத்தத்தின் உச்ச கட்டத்தில், நாட்டில் ஒரு சில பகுதியிலிருந்து இயங்கிக் கொண்டிருந்த சிறிய கெரில்லா அமைப்பை துரத்த முடியாது போனது ஏன்? இந்திய கொள்கை வகுப்பாளர்களின் தந்திரோபாயங்கள் தோல்வி கண்டது எதற்காக? எமது மண்ணில் இந்தியஇராணுவத்தின் தலையீடும், அதனால் ஏற்பட்ட பாரதூரமான விளைவுகள் பற்றி அறிவதானால் மேல் எழுப்பட்ட கேள்விகளுக்கான விடைகளைப் பகுத்தாய்வது அவசியம்.

1987 ஜூலை மாதத்தில் இந்திய - ஸ்ரீ லங்கா உடன்பாடு கைச்சாத்தானதும், அமைதி காக்கும் படை என்ற போர்வையில் 10,000 துருப்புக்களை தமிழர் வதியும் பிரதேசத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இந்தியத் துருப்புகள் உடன்படிக்கையின் பிரகாரம் மூன்று விடயங்களைக் கவனிக்க வேண்டியவர்களாயினர்.

- ★ ஸ்ரீ லங்கா ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக் கெரிலாக்களுக்கு மிடையில் பகைமை இல்லாமல்செய்வது,
- ★ தமிழ் மக்களின் உயிருக்கும் உரிமைக்கும் பாதுகாப்டளித்தல்,
- ★ திட்டத்தில் உள்ள விஷயங்களைச் செயற்படுத்த உதவுதல்.

இந்திய இராணுவம்

யல் - இராணுவ சக்தியாக வளர்ந்து தமிழர்களின் சுயநிர்ணயத்துக்கான போராட்டத்தை முன்னெடுத்துச் சல்வார்களேயானால், அது தமிழ் நாட்டிலும் தமிழர்களின் சுயநிர்ணயத்துக்கான கோஷத்தை முடுக்கிவிடலாம் என்று இந்தியத் தரப்பில் நம்பப்பட்டது. மேலும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் ஒரு சக்தி மிக்க வல்லரசாக விளங்கிய இந்தியா உபகண்டத்தில் தேசிய விடுதலைக்கான போராட்டங்களை ஜீரணிக்க முடியாமல் அவற்ற



அழிக்கும் வகையில் செயற்பட்டு வந்தது. ஆகவே விடுதலைப் புலிகள் அமைப்பில் தேசிய விடுதலைக்கான தீவிரமான போராட்டம் இந்தியாவுக்கு கோபமூட்டுவதாக இருந்தது. ஆகவே, விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தமிழரின் தேசிய இயக்கத்தை இல்லாமல் செய்வதோடு, சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தையும் மழுங்கடிக்கலாம் என்று இந்தியாவின் கொள்கை வகுப்பாளர் கருதினர்.

இக்கொள்கை இராணுவ பலத்தில் நம்பிக்கைகொண்டிருந்த சிங்கள ஆட்சியயளருக்கு நம்பிக்கையூட்டுவதாக இருந்தது. மேற்படி சிங்களவரின் ஒத்தாசையுடன் உடன்பாட்டைச் செயல்படுத்துவதன் மூலம் இந்தியா தனது புவியியல் - அரசியல் சார்ந்த அபிலாசைகளை நிறைவேற்றலாம். என நம்பியது மூன்றாவது, விடுத

முடியாததாயிற்று. இந்தியா 1987 ஒக்ரோபர் 10ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்புக்கு எதிராக யுத்த பிரகடனம் செய்தது.

சாதாரண தமிழ்மக்களைப் பொறுத்த வரை இந்த யுத்தம் ஓர் துர்துரதிஸ்டமாகும். யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகளின் கரில்லாத் தாக்குதலுக்கு முகம் கொடுக்க முடியாத இந்திய இராணுவம், எவ்விதப் பாதுகாப்புமின்றியிருந்த சாதரண மக்கள் மீது ஷெல்களையும், பிரங்கிக் குண்டு களையும் ஏவியது. இரண்டு வாரங்கள் வரை நீடித்த யாழ்ப்பாண யுத்தத்தில் இரண்டாயிரத்துக்கும் அதிகமான அப்பாவி முஸ்லிம், தமிழ் மக்கள் கொல்லப்பட்டன. 5000 பேர் வரை காயமுற்றனர். முன்னேறி வந்த இந்திய இராணுவப் பிரிவுகள், செய்வதறியாது அனாதரவாக நின்ற பெருந்திரளான அகதிகள் மீது நீசத்தனமான முறையில் பலாக்காரத்தைப் பாவித்து,

அவர்களைக் கொலை செய்து இரத்த வெள்ளத்தில் ஆழ்த்தித் துன்புறுத்தியது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவத்தின் யுத்தம்குடிமக்களுக்குஎதிரான யுத்தமாகத் திசை மாறியது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரிப்படுகொலைகள், ஹெலியில் இருந்து சாவகச்சேரி சந்தைப் பகுதியில் செய்த றொக்கற் பிரயோகம் சமீபத்தில் வல்வெட்டித்துறைக் கொலைகள் ஆகியன இந்திய இராணுவத்தின் படுபயங்கரமான காட்டுமிராண்டித் தனமான இராணுவ நடவடிக்கைகளைக் காட்டியது. இச் சம்பவங்களினால் சர்வதேச மட்டத்தில் இந்தியா கண்டனத்துக்குள்ளாகியது. விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத இந்திய இராணுவம், சாதாரண மக்கள் மீது பார்வையைத் திருப்பியது. மக்கள் மீது அடக்கு முறையைக் கட்

றான தரவுகளிலும், அறிக்கைகளிலும் நம்பிக்கை கொண்ட இந்திய கொள்கை வகுப்பாளர், விடுதலைப் புலிகளின் பலத்தையும், அவர்களது நோக்கத்தையும் அறிந்து கொள்ளாது, விடுதலைப் புலிகளை ஒரு சில நாட்களில் அழித்தொழிக்கலாம் என்று நம்பியிருந்தனர். யுத்தம் காலவரையறையின்றி நீடித்து, இந்திய இராணுவத்தில் ஏற்பட்ட இழப்புகளைக் கண்டதும், டெல்கி தனது தவறை உணரத் தலைப்பட்டது. விடுதலைப் புலிகள், சாறங்சட்டிய பெடியங்களின் கரடுமுரடான அமைப்பு என்று தாம் கருதியது பிழை என்பதை இந்தியா தெரிந்து கொண்டது. இந்திய இராணுவம் உலகில் எங்கும் நிகரில்லாத ஒரு இராணுவ அதிசயத்தை அறிந்து கொண்டது - அது ஒழுங்கமைந்த, கடும் கட்டுப்பாடுடைய, கருமமே கண்ணாயிருக்கும் புலிகள் கெரில்லா அமைப்பாகும். தனது இராணுவ தந்திரோ

பாயங்களையும், வியூகங்களையும் மாற்றியமைக்கவேண்டிய அவசிய அவசரம் டெல்லிக்கு ஏற்பட்டது. இந்திய இராணுவத்தின் கௌரவம் ஊசலாடியது. இது இப்படியிருந்தும் ராஜீவ்காந்தி நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு வர மறுத்து, விரைவானஒரு இராணுவ வெற்றியை எதிர்பார்த்தார். இந்தியா ஆக்கிரமித்த பகுதிகளில் அதன் இராணுவ

பலத்தைக்கூட்டி, விடுதலைப் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகளைத்தீவிரமாக முடுக்கிவிட இந்தியா எண்ணியது. ஒரு இலட்சத்துக்கு அதிகமான துருப்புகள் குவிக்கப்பட்டு, இராணுவநடவடிக்கைகளுக்குப் பலபெயர்களைச் சூட்டிக் கொண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராகக் களத்தில் இறங்கினார்கள். காடுகளில் யுத்தம் செய்ய விசேட பயிற்சி பெற்ற அதிரடிப் பிரிவுப்படைகள் வடபகுதிக்காடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக நிறுத்தப்பட்டனர். பல முனைகளில் பயங்கர யுத்தங்கள் நடந்தன. இந்திய இராணுவத்தின் பலத்துக்கு எதிராக விடுதலைப் புலிகள் தாக்குப்பிடித்ததோடு, இந்திய இராணுவத்துக்குப் பல இழப்புக்களையும் ஏற்படுத்தினர். இந்திய இராணுவத்தின் மனநிலை தள்ளாடித்தளரத் தொடங்கியது. பாரிய அளவிலான இராணுவ முஸ்தீபுகளுக்குப் பிறகு, இந்திய இராணுவ உயர்பீடம் விடுதலைப் புலிகளை வெல்ல முடியாது என்பதைஉணர்ந்தனர். புலிகளை அடக்குவதற்கு இந்தியா பெருந்தொகையான பணத்தைச் செலவு செய்தது, உயிர்களையும் இழந்தது.

யுத்தம் அனுமான்வால் போல் நீண்டுகொண்டு போகுமென்பதையும், இதனால் அந்நிய இராணுவம் ஸ்ரீலங்கா மண்ணில் நிலைகொண்டு விடும் என்பதை ஜனாதிபதி

(6ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக நூல் நிலைய அவல நிலைக்கு யார் காரணம் ?

ஆசிரியர்,
ஈழநாதம்.

வரலாற்றிலே சிந்தனையாளர்களையும், அறிஞர்களையும் உருவாக்குவதில் பல்கலைக்கழகங்கள்முன்னணி வகிக்கின்றன. அந்த வகையில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு ... டங்குண்டு என்பதை

கள் ஒப்படைக்கப்படாமல் இருப்பதாகவும் அறிகின்றோம்.

மாணவர்கள் தமக்குத் தேவையான சில புத்தகங்களைத் தமது வசதிக்காக வேறு புத்தக ராக்கிகளில் மறைத்து வைக்கிறார்கள்.

...பெறுவது. தமிழ் விடுதலைப் புலிகளின் கலை, கலாசாரப் பிரிவு தன் முதன்மைக் கவனத்தை இச் சேவை அவசிய தேவையாக உள்ள நிலையில் செறியச் செய்ததின் விளைவேயாகும்" என்று நேற்று 'ஈழநாதம்' வெளியிட்டிருந்த கட்டுரையில் ப. வை. ஜெயபாலன் சரியாகக் குறிப்பிட்டிருந்தார்.

கிளிநொச்சி இன்னமும் வெறும் காடுதான், வரண்ட பிரதேசம் என்று இப்பொழுதும் சிலர் கூறுவதுண்டு.

கிளிநொச்சி மாவட்டமும் இதை அண்டிய வன்னிப் பிரதேசங்களும் பல வீரர்களைப் பெற்றெடுத்தது மட்டுமல்லாமல் பல கலைஞர்களையும் உருவாக்கிய பகுதியாகும்.

அந்நியப்படை எடுப்புக்களால் ஒரு தேசிய இனத்தின் கலை, கலாசாரம் சீரழிந்து போவது வரலாறு கண்ட உண்மை. ஈழத்திலும் போராட்ட சூழ்நிலையும் போதைவஸ்துப் பாவனையும் பாலியல் சீர்கேடுகளும் நமது இனத்தையும் வெகுவாகப் பாதித்துவிட்டது.

இந்நிலையில்தான் பாதை மாறிய பயணங்களை நேராக்கி, சீராக்கி நமது மக்கள் மறந்துபோன பண்பாட்டையும் பாரம்பரிய கலைகளையும் மக்களுக்கு உணர்த்துவதற்கு விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவு கவின்கலைக்கல்லூரியை உருவாக்கியிருக்கிறது.

இக்கல்லூரியில் பாரம்பரிய கலை வடிவங்களான தவில், நாதஸ்வரம், வீணை, வயலின், மிருதங்கம், ஆர்மோனியம் மற்றும் நடனம், சங்கீதம், நடிப்பு போன்றவை கற்பிக்கப்படவிருக்கின்றன.

இன்னும் பல துறைகளிலும் இக் கல்லூரி தன் கவனத்தைச் செலுத்தவிருப்பதை மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்பர்.

"புத்தம்புதிய கலைகள் - பஞ்ச
பூதச்செயல்களின் நுட்பங்கள் - கூறும்
மெத்த வளருது மேற்கே - அந்த
மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை"

என்று இந்திய விடுதலை பெறுவதற்குமுன் பாரதியார் வேதனையோடு பாடினார்.

நாம் இனி வேதனைப்பட வேண்டிய நிலை வராது என்பதற்கு உரியகாலத்தில் தூரதிருஷ்டியுடன் விடுதலைப் புலிகளின் கலை கலாசாரப் பிரிவு இந்தக் கவின் கலைக்கல்லூரியை பொருத்தமான இடத்தில் அமைத்திருப்பது சாலும்.

வாழ்க, வளர்க என்று இக் கல்லூரியை வாழ்த்துவோம்.

# மூளாய் -- பருத்தித்துறை பஸ்சேவை ஆரம்பிக்கவும்

(பண்டத்தரிப்பு)

பருத்தித்துறை-மூளாய் பஸ் சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு வலிகாமம், வடமராட்சி பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராணுவ நடவடிக்கைகளால் இந்த பஸ் சேவை 1984இல் இருந்து இடைநிறுத்தப்பட்டிருந்தது.

தற்போது இந்தப் பாதையூடாக தட்டிவான்கள் சேவையிலீடுபடுகின்றன. ஆனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் இவற்றில் பயணம் செய்கின்றனர்.

இந்த பஸ் சேவையின்றி தெல்லிப்பழை ஆஸ்பத்திரிக்கு வரும் அச்சுவேலி, பண்டத்தரிப்பு பகுதி நோயாளர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவிக்கின்றனர். (12)

...பாடு கைச்சாத்தானதும், அமைதி காக்கும் படை என்ற போர்வையில் 10,000 துருப்புக்களை தமிழர் வதியும் பிரதேசத்தின் தலைநகரான யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்டன. இந்தியத் துருப்புகள் உடன்படிக்கையின் பிரசாரம் மூன்று விடயங்களைக் கவனிக்க வேண்டியவர்களாயினர்.

- ★ ஸ்ரீ லங்கா ஆயுதப்படையினருக்கும் விடுதலைப் புலிகள் அமைப்புக் கெரிலாக்களுக்கு மிடையில் பகைமை இல்லாமல்செய்வது,
- ★ தமிழ் மக்களின் உயிருக்கும் உரிமைக்கும் பாதுகாப்டளித்தல்,
- ★ திட்டத்தில் உள்ள விஷயங்களைச் செயற்படுத்த உதவுதல்.

## இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்ததன் காரணம்

மேலெழுந்தவாரியாகப்பார்ப்பவர்களுக்கு, உடன்பாட்டின்படி இந்திய இராணுவத்தினருக்கு வழங்கப்பட்ட கடமை சமாதானத்தை நிலைநாட்டுவது என்பதுபோல் தெரியும்.

ஆனால் உண்மையில் இந்திய இராணுவம் இலங்கையில் நுழைந்ததற்கான தந்திரோபாய இலக்குகள் வேறு.

இந்திய கொள்கை வகுப்பாளரின் திட்டப்படி, எல்லாவற்றிற்கும் மேலாக, இலங்கையில் இந்திய இராணுவத்துக்கு சில விசேடமான இராணுவக் கடமைகளும் வழங்கப்பட்டன. இப்பிரதேசத்தில் உள்ள வேறு விஸ்தரிப்புக் கொள்கைகளையுடைய சக்திகளின் ஆதிக்கம், இலங்கையில் ஊடுருவாமல் தடுப்பது இலங்கையை இந்தியாவின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்துக்குள் கொணர்வது ஆகியன இந்தியாவின் புவியியல் - அரசியல் ரீதியான திட்டத்தின் முக்கிய நோக்கங்களில் ஒன்றாகும். இந்த நோக்கத்தை அடைவதற்கு இந்தியப் படையை இலங்கை மண்ணில் நிலைகொள்ள வைப்பது வெளிநாட்டு ஊடுருவலுக்கு எதிரான சக்தி வாய்ந்த தடையாகக் கருதப்பட்டது. இரண்டாவது விடுதலைப் புலிகள் நிபந்தனையின்றிச் சரணடைந்து, ஆயுதங்களைக் கையளிக்காதுவிட்டால், இந்தியப் படைகள் அவர்களை எதிர்த்துப் போராடி ஆயுதங்களைப் பறித்து, விடுதலைப் புலி கெரிலாக்களை நிராயுதபாணியாக்கும்வேலையும் இந்திய இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இந்தியாவின் தந்திரோபாயநோக்கின் அடிநாதம் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக செயலிழக்கச் செய்து முடிவு கட்டுவதாகும். விடுதலைப் புலிகள் ஒரு சக்திமிக்க அரசியல் தலைப் புலிகள் அமைப்பில் தேசிய விடுதலைக்கான தீவிரமான போராட்டம் இந்தியாவுக்கு கோபமூட்டுவதாக இருந்தது. ஆகவே, விடுதலைப் புலிகளை அழிப்பதன் மூலம் தமிழரின் தேசிய இயக்கத்தை இல்லாமல் செய்வதோடு, சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தையும் மழுங்கடிக்கலாம் என்று இந்தியாவின் கொள்கை வகுப்பாளர் கருதினர்.

இக்கொள்கை இராணுவ பலத்தில் நம்பிக்கைகொண்டிருந்த சிங்கள ஆட்சியயளருக்கு நம்பிக்கையூட்டுவதாக இருந்தது. மேற்படி சிங்களவரின் ஒத்தாசையுடன் உடன்பாட்டைச் செயல்படுத்துவதன் மூலம் இந்தியா தனது புவியியல் - அரசியல் சார்ந்த அபிலாசைகளை நிறைவேற்றலாம். என நம்பியது மூன்றாவது, விடுதலைப் புலிகள் அமைப்பு மறுதலித்த மாகாண சபையை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கும், பற்றாக்குறையான மகாண சபையை புலிகள் அமைப்பு எதிர்த்தபோதிலும், தனிப்பட்ட அரசியல் காரணங்களுக்காக தமிழ் இனத்தை ஏமாற்றி துரோகம் செய்து பதவிக்கு வரக்காத்திருந்த குழுக்களை ஆட்சி பீடத்தில் அமர்த்தவும் இந்திய இராணுவம் இலங்கையில் இருப்பது அவசியமாகின்றது. ஆகவே இந்திய இராணுவத்துக்கு வழங்கப்பட்ட கடமை சமாதானத்தை நிலைநாட்டுவதல்ல, தமிழர்களின் அபிலாசைகளையும், சிங்கள மக்களின் விருப்பங்களையும் கருத்திற்கொள்ளாது, ஏகாதிபத்திய நோக்குடன் செயற்படும் டெல்லி ஆட்சியாளர்களினதும் அரசியல் வாதிகளதும் கொள்கையை இலங்கையில் அமுல் செய்வதே இந்திய இராணுவத்தின் பணியாகும்.

## போர் தவிர்க்க முடியாதது

விடுதலைப் புலிகள் தலைமைப் பீடம் இந்திய அரசின் தந்திரோபாயங்களை நன்குணர்ந்திருந்தது. இந்தியாவின் திட்டமிட்ட இராணுவ தலையீட்டுக்கு எதிராக பிராபாகரன் டெல்லிப் பேச்சுகளின் போது தெரிவித்த எதிர்ப்புகள் பயன்தர வில்லை. இந்தியாவுடன ஆயுதப் போராட்டத்தை விரும்பாதவிடுதலைப் புலிகள், தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் உரிமைகள் உடன்பாட்டின் மூலம் பாதுகாக்கப் படுமானால், தாம் ஆயுதங்களைக் களைந்து, உடன்பாட்டைச் செயற்படுத்த ஒத்துழைப்பதாகத் தெரிவித்தார். இலங்கையும், இந்தியாவும் ஏற்படுத்திய சூழ்நிலையினால், இந்தியா விடுதலைப் புலிகளு கு எதிராகப் போர் தொடுப்பது தவிர்க்க ...த்துன்புறுத்தியது. விடுதலைப் புலிகளுக்கு எதிராக இந்திய இராணுவத்தின் யுத்தம்குடிமக்களுக்குஎதிரான யுத்தமாகத் திசை மாறியது. யாழ்ப்பாண ஆஸ்பத்திரிப்படுகொலைகள், ஹெலியில் இருந்து சாவகச்சேரி சந்தைப் பகுதியில் செய்த றொக்கற் பிரயோகம் சமீபத்தில் வல்வெட்டித்துறைக் கொலைகள் ஆகியன இந்திய இராணுவத்தின் படுபயங்கரமான காட்டுமிராண்டித் தனமான இராணுவ நடவடிக்கைகளைக் காட்டியது. இச் சம்பவங்களினால் சர்வதேச மட்டத்தில் இந்தியா கண்டனத்துக்குள்ளாகியது. விடுதலைப் புலிகளின் கெரில்லாத் தாக்குதல்களைச் சமாளிக்க முடியாத இந்திய இராணுவம், சாதாரண மக்கள் மீது பார்வையைத் திருப்பியது. மக்கள் மீது அடக்கு முறையைக் கட்டவிழ்த்து விட்டு, ஈவிரக்கமின்றி மக்களைக் கொலை செய்தது. 6000க்கும் அதிகமான சாமானியக் குடிமக்கள் இந்த இரண்டு வருட காலத்தில் உயிரிழந்தார்கள்.

இந்திய இராணுவம் பயத்தின் சின்னமாகவும், வெறுப்பின் சின்னமாகவும் கருதப்பட்டது. தங்கள் நாட்டைப் பிடித்து வைத்திருக்கும் ஒரு ஆக்கிரமிப்புப் படையாகவே, மக்கள் இந்திய இராணுவத்தைக் கருதினார்கள். இந்திய இராவணும் தம்மைப் பாதுகாக்கும் என்று முஸ்லிங்களும், தமிழர்களும் நம்பினர். இந்திய இராணுவம் இவர்களின் நம்பிக்கையில் மண்ணைத் தூவியது. நம்பிக்கையிழந்த மக்கள் விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்துக்கு பாரிய ஆதரவு வழங்கினார்கள். சாதாரண மக்களுக்கு எதிராக,அறிவற்ற முறையில் இந்திய இராணுவத்தின் செயற்பாடுகள், ஒட்டுமொத்தமாக மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட டுபயங்கரமான தண்டணைகள், மனித உயிருக்கு மதிப்புக் கொடாமல் நடந்து கொண்டது. ஆகியன மக்களுக்கும் இந்திய இராணுவத்துக்குமிடையில் விரிசலை உண்டாக்கியது. இந்தியாவின் இராணுவ அணுகுமுறை பாரதூரமாகத் தோற்றது.

## விடுதலைப் புலிகள் பற்றிய தவறான மதிப்பீடு

விடுதலைப் புலிகள் கெரில்லாப் படையைப் பற்றியும், அவர்களது போர்க்களத் திறமை, மனித சக்தி, எல்லாவற்றிற்கும் மேலாக இந்திய இராணுவத்தை எதிர்த்துப் போராட வேண்டும் என்ற திடசங்கற்பம் ஆகியவற்றைப் பற்றி இந்திய தரப்பு தப்புக் கணக்குப் போட்டமை, இந்திய இராணுவத்தின் தோல்விக்கான மற்றொரு காரணமாகும். றோ வழங்கிய தவ... ஏற்பட்டது. இந்திய இராணுவத்தின் கௌரவம் ஊசலாடியது. இது இப்படியிருந்தும் ராஜீவ்காந்தி நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்கு வர மறுத்து, விரைவானஒரு இராணுவ வெற்றியை எதிர்பார்த்தார். இந்தியா ஆக்கிரமித்த பகுதிகளில் அதன் இராணுவ ...தைச் செலவு செய்தது, உயிர்களையும் இழந்தது.

யுத்தம் அனுமான்வால் போல் நீண்டுகொண்டு போகுமென்பதையும், இதனால் அந்நிய இராணுவம் ஸ்ரீலங்கா மண்ணில் நிலைகொண்டு விடும் என்பதை ஜனாதிபதி

(6ஆம் பக்கம் பார்க்க)

# பல்கலைக்கழக நூல் நிலைய அவல நிலைக்கு யார் காரணம்?

ஆசிரியர்,
ஈழநாதம்.

வரலாற்றிலே சிந்தனையாளர்களையும், அறிஞர்களையும் உருவாக்குவதில் பல்கலைக்கழகங்கள் முன்னணி வகிக்கின்றன. அந்த வகையில் யாழ். பல்கலைக்கழகத்திற்கு பங்குண்டு என்பதை யாரும் விளங்கிக் கொள்வதில் தவறு விடக்கூடாது. இவ்வாறான பங்களிப்பிற்கு முதுகெலும்பாக விளங்குவது பல்கலைக்கழகங்களது நூல் நிலையங்கள் ஆகும். இது யாவரும் அறிந்த விடயம். இந்த விடயத்தில் 04-03-90 ஈழநாதத்தில் "யாழ். பல்கலைக்கழக நூல் நிலைய அவல நிலை" என்ற கலைப்பில் வந்த செய்தி மிகவும் வருந்தத்தக்க விடயமாக உள்ளது. வடக்குக் கிழக்குப் பல்கலைக்கழகங்கள் எத்தகைய சூழ்நிலையில் இயங்குகின்றன என்பது ஒருபுறமிருக்க அதில் யாழ். பல்கலைக்கழகம் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கியது. யுத்த காலத்தில் அது எப்படி தனது நூல்களைப் பாதுகாத்துக் கொண்டது. எவ்வகையான புத்தகங்கள் அழிந்தன, நதைந்தன,காணமல் போயின என்பது எல்லாம் கவனத்துக்கு உரியன. மறுபுறம் அவற்றுக்கான உதவிகள், உதவிக்கான வாய்ப்புகள் எவ்வாறு தட்டிக்கழிக்கப்படுகின்றது என்பதையும் நாம் உணரவேண்டும்.

மாணவர்கள் விரிவுரையாளர்கள் ஆகியோரின் நலனுக்காகவே நூலகம் இருக்கிறது. நூலகத்தை வழி நடத்திச் செல்பவர்களாக மட்டுமே நூலக ஊழியர்கள் செயற்படுகிறவர்கள், குறிப்பாக சில புத்தகங்கள் வருடத்திற்கு ஒரு தடவையேனும் பாவிக்காமல் அடுக்கி வைக்கப்பட்டுள்ளன. அவற்றையெல்லாம் சிதையாமல் ஊழியர்களே பாதுகாத்து வருகிறார்கள். புத்தகத்தை இரவலாக எடுத்துச் செல்லும் மாணவர்கள் அல்லது விரிவுரையாளர்கள் நீண்ட காலம் திருப்பிக் கொடுக்காமல் இருப்பதும் நடைமுறையில் காணக்கூடியது. இதற்காகப் பல தடவை ஞாபகக் கடிதங்கள் அனுப்பப்பட்டும். புத்தகங்கள் ஒப்படைக்கப்படாமல் இருப்பதாகவும் அறிகின்றோம்.

மாணவர்கள் தமக்குத் தேவையான சில புத்தகங்களைத் தமது வசதிக்காக வேறு புத்தக ராக்கிகளில் மறைத்து வைக்கிறார்கள். பல ஆயிரக்கணக்கான புத்தகங்கள் உள்ள நூலகத்தில் இவ்வாறு தவறுகின்ற புத்தகங்களைத் தேடிப் பிடிப்பது இலகுவான காரியமல்ல. இடம் மாறிய புத்தகங்கள், தொலைந்த புத்தகங்களுக்குச் சமமானது.'

மேலும் மாணவர்கள் தங்களின் தேவைக்கேற்ப சில புத்தகங்களின் முக்கிய பகுதி

## மக்கள் மடல்

களைக் கிழித்துச் செல்கிறார்கள். இதனை ஊழியர்கள் கண்டறிவது கடினம். ஆகவே மாணவர்கள் பொறுப்புள்ளவர்களாக நடந்து கொள்வதுடன், எதிர்கால மாணவர்களின் அறிவுத் தேவையையும் இத்தருணத்தில் கவனத்தில் கொள்வது சிந்தனைத் துறைக்கு நாம் செய்யும் பங்களிப்பாகும்.

போட்டோ கொப்பி விடயத்தில் நூலக ஊழியர் எதுவும் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். குறிப்பாக முன்னர் நூலகத்திற்கென தருவிக்கப்பட்ட போட்டோ பிரதி செய்யும் மெசினும் கொஞ்சக் காலத்திலே வயது போய் நின்று விட்டது. இதற்கு பொறுப்பு நூலக ஊழியர்கள் அல்ல போட்டோ பிரதி பண்ணுவதற்காக ஒரு மணித்தியாலத்திற்கு இரவல் கொடுக்கப்படுகிறது. இந் நிலையில் பல பழைய புத்தகங்கள் மேலும் சிதைவடைய வாய்ப்பேற்படுவதுடன், மாணவர்களும் அதிக செலவை எதிர்கொள்ள வேணடியுள்ளது. இவ்விரு சிரமங்களையும் தீர்த்துக் கொள்வதற்கு பல்கலைக்கழக நிர்வாகம் நடவடிக்கை எடுப்பது இலகுவானது,

நூலகத்தில் அக்கறையுள்ள
மாணவர்கள்.

ஈழநாதம்

# மேஜர் காண்டீபனின் பூதவுடல் இராணுவ மரியாதையுடன் தகனம்

(கிளிநொச்சி)

மேஜர் காண்டீபனின் பூதவுடல் வியாழன் மாலை சுமார் 8 மணியளவில் கண்டாவளை இந்து மயானத்தில் தீயுடன் சங்கமமானது. கண்டீபனின் பூதவுடலுக்கு அவரது தந்தை மகாலிங்கம் தீமூட்டியபோது மயானத்தில் கூடிநின்ற ஆயிரக்கணக்கான மக்கள் ஹோவெனக் கதறி அழுத காட்சி கல்லையும் உருக வைக்கக்கூடிதாக இருந்தது.

பூதவுடல் தகனம் செய்யப்படுவதற்கு முன் தமிழீழ விடுதலைப் புலிகளின் இராணுவ மரியாதை இடம்பெற்றது. கால் கற்றேர ஷெல், கிறினைற், துப்பாக்கிவேட்டுகள் ஆகியன தீர்க்கப்பட்டு மரியாதை செய்யப்பட்ட பின்பே காண்டீபனின் சிதைக்குத் தீமூட்டப்பட்டது.

வியாழக்கிழமை மாலை 5-15 மணிக்கு மேஜர் காண்டீபனின் பூதவுடல் கிளிநொச்சியிலிருந்து ஊர்வலமாக பரந்தன் சந்திக்குக் கொண்டு செல்லப்பட்டு, அங்கிருந்து கண்டாவளையிலுள்ள காண்டீபனுடைய வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்து.

பரந்தன் சந்தியிலிருந்து கண்டாவளை வரை பாடசாலை மாணவர்கள் சீருடை அணிந்து அணிவகுத்து நின்று பூதவுடலுக்கு மரியாதை செய்தனர், வீதிகள் தோறும் கறுப்புக் கொடிகள் தொங்க விடப்பட்டன. வாழை, கமுகு மரங்கள் கட்டுப்பட்டு தோரணங்களும் கட்டப்பட்டிருந்தன. வழிவழியே மக்கள் கூட்டம் கூட்டமாக சோகமே உருவாக நின்று பூதவுடலுக்கு அஞ்சலி செய்தனர்.

அன்று மாலை 6 - 30 மணியளவில் காண்டீபனின் பூதவுடல் கண்டாவளையிலுள்ள அவனது இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, பொது மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. மக்கள் வரிசை வரிசையாகச் சென்று பூதவுடலுக்கு இறுதி அஞ்சலி செய்தனர்.

சுமார் 7 மணியளவில் காண்டீபனின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து மயானத்துக்கு எடுத்துச் சேல்லப்பட்டபோது அவ்வூர்வலத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கிளிநொச்சி மாவட்ட அரசியல் பொறுப்பாளர் கோபி, யாழ். மாவட்டப் பொறுப்பாளர் டொமினிக் சாவகச்சேரிப் பொறுப்பாளர் தினேஷ் மற்றும் கிராமிய அரசியற் பொறுப்பாளர்களும் கலந்து கொண்டனர்.

யாழ் இந்து மாணவர்கள் சகல ஊர்வலங்களிலும் கலந்துகொண்டு காண்டீபனுக்கு தமது இறுதி மரியாதையை செலுத்தினர். (த)

## யாழ். வைத்தியசாலையில் விசர்நாய் கடிக்கு மருந்தில்லை

யாழ். வைத்தியசாலையில் விசர்நாய்கடி மருந்துப் பற்றாக்குறை கடந்த பல மாதங்களாக நிலவிவருகிறது. இதனால் தூர இடங்களில் இருந்து வரும் நோயாளர்கள் பெரும் அவஸ்தைப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

இதுபற்றி ஒரு நோயாளர் கருத்து வெளியிடுகையில் தாம் கிளிநொச்சியிலிருந்து வருவதாகவும் இங்கு (யாழ் ஆஸ்பத்திரி) மருந்து இல்லாததால் மந்திகை வைத்தியசாலைக்கு செல்லவேண்டி இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதுபற்றி மருந்துக் களஞ்சியத்தில் வினவியபோது, கொழும்பிலிருக்கும் மருத்துவ ஆய்வு நிலையம் எமக்கு இம்மருந்துகளை அனுப்புவதில்லை நாப்தான் நான்கு நாட்களுக்கு ஒருமுறை கொழும்பிற்கு ஆட்களை அனுப்பி சிபார்சு செய்து மருந்தை பெற்றுக் கொள்வதாகவும் களஞ்சியத்திலிருந்து தெரிவித்தார்.

மேலும் கொழும்பிலிருந்து எமக்கு ஆயிரம் மில்லிலீட்டர் மருந்து வாரா வாரம் அனுப்பும் மிடத்து எமக்கு மருந்து தட்டுப்பாடு ஏற்படாது என்றும் தெரிவித்தார்:

இதுதவிர நாம் கொழும்பை நம்பி இருப்பதிலும் பார்க்க நாமே தெருவில் திரியும் நாய்களை கட்டுப்படுத்து மிடத்து இந்தநாய்கடிப் பிரச்சனையை ஓரளவு என்றாலும் குறைத்துக்கொள்ளலாம் என்றும் களஞ்சியப் பகுதியிலிருந்து அறியக்கூடியதாய் உள்ளது.

## தீக்குளித்த மாணவன் மாணவியைத் தழுவினார்!

(புதுடில்லி)

நடத்தைப் பிழை காரணமாக பாடசாலையிலிருந்து விலக்கப்பட்ட, திருமணமான மாணவர் ஒருவர் கடந்த செவ்வாயன்று வகுப்பறைக்குள் புகுந்து தனக்குத்தானே தீமூட்டிய நிலையில், தான் ஒருதலைப் பட்சமாக விரும்பிய பெண்ணைக் கட்டித் தழுவியுள்ளார். இச் செய்தியை ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ராஜ்குமார் என்ற 20 வயது நிரம்பிய இம் முன்னாள் மா

யேறியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

செவ்வாயன்று நியூ டெல்கியிலுள்ள இடைநிலைப் பாடசாலை யொன்றில் பரீட்சை நடந்துகொண்டிருந்த சமயம், தனது உடம்பை மண்ணெண்ணையில் நணைத்த வண்ணம் ராஜ்குமார் வகுப்பறையில் நுழைந்துள்ளார். பின்பு தனக்குத்தானே தீமூட்டிய பிறகு, மாணவியின் மீது பாய்ந்து கட்டித் தழுவியுள்ளார்.

பொலிஸ் தரப்புச் செய்திகளின்படி, ராஜ்குமாரை அங்க

## மட்டக்களப்பில் மீண்டும் விளையாட்டுப் போட்டிகள்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்ட பாடசாலை விளையாட்டு போட்டிகள் நீண்ட கால இடைவெளியின் பின் இம்முறை கலகலப்பாக நடைபெற்று வருகின்றன.

புனித மக்கேல் கல்லூரி, புனித சிசிலியா வித், சிவானந்தா வித், இந்துக்கல்லூரி, மத்திய கல்லூரி உட்பட பிரபல பாடசாலைகளின் வருடாந்த இல்ல விளையாட்டு போட்டிகள் நடைபெற்று முடிந்துவிட்டன.

விளையாட்டுப் போட்டி பரிசளிப்பு விழா இரவு 7.30 மணிவரை நடைபெற்று வழமையான சூழ்நிலையை எடுத்துக்காட்டுகின்றன. (37)

## அங்குரார்பணக் கூட்டம்

(யாழ்ப்பாணம)

சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியளவில் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற உள்ளது.

## சலுசலா புடவை விநியோகம்

(கொழும்பு)

எதிர்வரும் தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு சலுசலா நிறுவனம் நாட்டிலுள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான புடவைகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது.

## சாரதி விடுதலை

(யாழ்ப்பாணம்)

மேஜர் காண்டீபனின் மறைவிற்கு காரணமாய் இருந்த பஸ் சாரதி நேற்று புலிகளினால் விடுதலை செய்யப்பட்டார்.

மனிதாபிமான அடிட்படையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குக் காரணமாயிருந்த மினிபஸ் ஒப்படைக்கப்பட்டது. (தி)

## கால் ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டி

(செங்கலடி)

கால் ஊனமுற்றோருக்கு வழங்குவதற்காக 10 முச்சக்கர வண்டிகள் மட்டக்களப்பு சமூகசேவைகள் திணைக்களத்

## மக்கள் வங்கி கிளைகளுடன் தமிழில் தொடர்பு

(பண்டத்தரிப்பு)

மக்கள் வங்கியின் தலைமை அலுவலகம் தமிழ் பிரதேசத்தில் இயங்கும் அதன் கிளைகளுடன் தமிழில் தொடர்பு கொள்ளத் தொடங்கியுள்ளது

தமிழ் மொழிக்கு அரசகரும சம அந்தஸ்து சட்டமூலம் இயற்றப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அரசாங்கம் முழுமையாக தமிழ் உபயோகத்தை நடைமுறைப்படுத்தாத நிலையிலும் மக்கள் வங்கி கிளைகளுடன் தமிழில் தொடர்பு கொள்வதை மக்கள் பாராட்டுகின்றனர். (12)

## தற்கொலை

(சுதுமலை)

சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த கனகரத்தினம் சாந்தகுமாரி (24) என்பவர்

மட்டக்களப்பில்

## புலிகள் மக்கள் முன்னனி தீவிர பிரச்சார நடவடிக்கை

(மட்டக்களப்பு)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரதான அமைப்பாளர் திரு. ப. மூர்த்தி அவர்களும் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் தலைமைச் செயற்குழு உறுப்பினர் திரு. செங்கதிர் அவர்களும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பல உதவி அரசாங்க அதிபர்பிரிவுகளிலுள்ள பொது மக்கள், வர்த்தகர்கள், தொழிற் சங்கப் பிரதிநிதிகள் ஆகியோரைச் சந்தித்து கட்சியின் கொள்கை செயற்பாடுகள் எதிர்கால நடவடிக்கைகள் - திட்டங்கள் போன்றவற்றை விளக்கிவருகின்றனர்.

கடந்த புதன்கிழமை மண்முனை வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் கருத்தரங்கு ஒன்று நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் இருபது கட்சிக் கிளைகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அத்துடன் மட்டக்களப்பு வர்த்தகர் சங்கம், மட்டக்களப்பு கலைஞர் ஒன்றியம், மட்டக்களப்பு மாவட்ட அன்னையர் முன்னணி ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.

இக் கருத்தரங்கை மட்டக்களப்பு மாவட்ட அரசியல் பிரிவு ஒழுங்கு செய்திருந்தது. இதில் திரு. ப. மூர்த்தி, செங்கதிர் உட்பட பலர் உரையாற்றினர்.

### தமிழ்..

(1 ஆம் பக்க தொடர்ச்சி)

கௌரவ செயலாளர், கல்வித் திணைக்கள ஊழியர் மட்டுப்படுத்தப்பட்ட கூட்டுறவுச் சிக்கன சேமிப்புச் சங்கம், 294, கொழும்பு 3 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மாவட்ட ரீதியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் எழுத்தாளர்கள் தமது கதைகளுக்கு முறையே ரூபா 500, 300, 200 பரிசுகளும், தேசிய மட்டத்தில் முதல் பத்திடங்களைப் பெறுபவர்களுக்குச் சான்றிதழ்களும், முதல் மூன்றிடங்களுக்கும் முறையே 3000 2000, 1000 ரூபா பணப் பரிசுகள் வழங்கப்படும். (12)

### ஈழ மண்ணில்

5 ஆம் பக்கத் தொடர்ச்சி

பிரேமதாசா உணர்ந்தார். இதனால் வடபகுதி மாத்திரம் குழம்பவில்லை. தெற்கில் நாடு முழுவதும் ஜே. வி. பி. யின் வழிநடத்தலால் எதிர்த்தெழுந்து, இந்திய ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு ஒழிய வேண்டுமென்று கலகக்கொடி உயர்த்தினர். இந்தியத்தலைவர்கள் எதிர்பாராதநேரத்தில் விடுதலைப் புலிகளைக் கொழும்புக்கு சமாதானப் பேச்சுவார்த்தைக்கு பிரேமதாஸா அழைத்தார். இதன் பிறகு இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு வேண்டினார். ராஜரீகப் பேச்சுவார்த்தைகள் பல இழுபறிகளுக்குப் பிறகு இந்திய இராணுவம் ஒரு கால அட்டவணைக்கமைய ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறச் சம்மதித்தது. இப்போது பல தமிழ் மாவட்டங்களிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறி விட்டது,

#### இந்தியாவின் இமாலயத் தவறு

தமிழ் ஈழத்தில் இந்தியாவின் இராணுவத் தலையீடு ஒரு இமாலயத் தவறென்பதை இந்தியா உட்பட சர்வதேச அரசியல் அவதானிப்பாளர்களும் கருதுகிறார்கள். இராணுவத் தலையீட்டால் எந்த விதமான பயனுமில்லை

மையைக் கண்டு கொள்ளலாம். இந்தியாவின் அமைதிகாக்கும் முயற்சி இரத்தம் சிந்தும் யுத்தமாகத் தலையெடுத்தது. ஆயுதம் களையும் தொழில் ஆயுதம் வழங்கும் தொழிலாக மாறி ரி.என்.ஏ. என்ற காலாள் இராணுவத்தையும் உண்டுபண்ணியது. தமிழரின் உயிருக்குப் பாதுகாப்பு என்ற நிலை தலைகீழாக மாறித் தமிழருக்கும், முஸ்லிம்களும் பாதுகாப்பான சூழ்நிலையில் அழித்தொழிக்கப்பட்டனர். விடுதலைப் புலிகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்ற தந்திரோபாயம் விடுதலைப் புலிகளைத் தமிழர் மண்ணில் சக்திவாய்ந்த ஒரு அரசியல் இராணுவ அமைப்பாகப் பரிணமிக்கச் செய்தது.

இந்திய நிர்வாகம் மக்களின் அபிலாசைகளையும், விருப்பங்களையும் முற்றாகப் புறக்கணித்து, வெகுஜன ஆதரவைப் பெற்ற ஒரு தேசிய விடுதலை இபக்கத்துக்கு எதிராகப் போராடத் துணிந்து களத்தில் இறங்கியதால். இந்தியாவின் சகலவிதமான ஊக்குவிப்புகளும் தோல்வியைத் தழுவின. அரசியல், நிர்வாக முடிவுகளை செயற்படுத்த ஒரு மரபு ரீதியான இராணுவத்தைப் பாவித்தது மற்றொரு பெரிய தவறாகும். கிழக்காலும் ஒதுக்கப்பட்டு, மேற்காலும் வெறுக்கப்பட்ட ஈ பி. ஆர். எல் எவ்வைச் சேர்த்

தாம் கிளிநொச்சியிலிருந்து வருவதாகவும் இங்கு (யாழ் ஆஸ்பத்திரி) மருந்து இல்லாததால் மந்திகை வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி இருப்பதாகவும் தெரிவித்தார்.

இதுபற்றி மருந்துக் களஞ்சியத்தில் வினவியபோது, கொழும்பிலிருக்கும் மருத்துவ ஆய்வு நிலையம் எமக்கு இம்மருந்துகளை அனுப்புவதில்லை நாம்தான் நான்கு நாட்களுக்கு ஒருமுறை கொழும்பிற்கு ஆட்களை அனுப்பி சிபார்சு செய்து மருந்தை பெற்றுக் கொள்வதாகவும் களஞ்சியத்திலிருந்து தெரிவித்தார்.

மேலும் கொழும்பிலிருந்து எமக்கு ஆயிரம் மில்லி லீட்டர் மருந்து வாரா வாரம் அனுப்பும் மிடத்து எமக்கு மருந்து

## சோனகர் சங்கம் கண்டனம்

(கொழும்பு)

முதலமைச்சர் திரு. வரதராஜப்பெருமாளின் ஒருதலைப் பட்ச்சமான தனி ஈழப்பிரகடனத்தை அகில இலங்கை சோனகர் சங்கம் கவலை தெரிவித்து அறிக்கை யொன்றை விடுத்துள்ளது.

யாழ்ப்பாணம், திருகோணமலை மன்னார், ஆகிய மாவட்டங்கள் உட்பட கிழக்கு மாகணம் உட்பட வடக்கு கிழக்கு பகுதிகளில் சுமார் முப்பது சதவீத முஸ்லிம்கள் வாழ்கின்றனர் சோனகர்களும், முஸ்லிம்களும் இப்பிரகடனத்தை ஏற்றுக் கொள்ள வில்லை.

முஸ்லிம் மக்களின் அபிலாசைகள் நோக்கம் தமிழ் சிங்கள மக்களுடன் அமைதியாகவும் ஒற்றுமையாகவும் வாழ்வதாகும்.

பல இன மத மக்கள் வாழும் இடங்களில் ஐக்கியம் இறைமை பிரதேச ஒருமைப்பாடு சுதந்திரம் என்பவற்றை பேணுவதும் வலுப்படுத்துவதும் அவர்களின் இலட்சியமாகும்.

வடக்கு, கிழக்கு பகுதிகளில் அமைதி,. சமாதானம் ஒற்றுமை ஏற்படுத்த அரசாங்கம் ஆக்கபூர்வ நடவடிகை எடுக்க வேண்டும் எனவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

## மானிப்பாயில் பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இன்று சனிக்கிழமை மாலை விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினர் கலந்து கொள்ளும் பொதுக் கூட்டம் நடை பெற உள்ளது.

கூட்டத்தின் முடிவில் 'நடந்து வந்த பாதை' வில்லிசை நிகழ்ச்சியும் நடைபெற உள்ளது. (தி)

அறியக்கூடியதாய் உள்ளது.

யளவில் காண்டீபனின் பூத

# தீக்குளித்த மாணவன் மாணவியைத் தழுவினார்!

(புதுடில்லி)

நடத்தைப் பிழை காரணமாக பாடசாலையிலிருந்து விலக்கப்பட்ட, திருமணமான மாணவர் ஒருவர் கடந்த செவ்வாயன்று வகுப்பறைக்குள் புகுந்து தனக்குத்தானே தீமூட்டிய நிலையில், தான் ஒருதலைப் பட்சமாக விரும்பிய பெண்ணைக் கட்டித் தழுவியுள்ளார். இச் செய்தியை ரைம்ஸ் ஒவ் இந்தியா பத்திரிகை வெளியிட்டுள்ளது.

ராஜ்குமார் என்ற 20 வயது நிரம்பிய இம் முன்னாள் மாணவர் உடம்பெங்கும் பாரிய எரிகாயங்களுடன் நியூ டெல்கி மருத்துவ மனையொன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளாராம். இவரின் நிலை கவலைக்கிடமாய் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்ததாக மேற்படி பத்திரிகை தெரிவிக்கிறது.

வகுப்பறையில், இவ் இக்கட்டான நிலையில் மாட்டிக் கொண்ட பெண்ணை ஆசிரியர்கள் தலையிட்டுக் காப்பாற்றியுள்ளனரென்றும், காலில் ஏற்பட்ட சிறு எரிகாயத்துக்கு இவர் மருத்துவ மனையில் சிகிச்சைபெற்று வெளியேறியுள்ளார் என்றும் தெரியவருகிறது.

செவ்வாயன்று நியூ டெல்கியிலுள்ள இடைநிலைப் பாடசாலை யொன்றில் பரீட்சை நடந்துகொண்டிருந்த சமயம், தனது உடம்பை மண்ணெண்ணையில் நணைத்த வண்ணம் ராஜ்குமார் வகுப்பறையில் நுழைந்துள்ளார்.

பின்பு தனக்குத்தானே தீ மூட்டிய பிறகு, மாணவியின் மீது பாய்ந்து கட்டித் தழுவியுள்ளார்.

பொலிஸ் தரப்புச் செய்திகளின்படி, ராஜ்குமாரை அந்த மாணவிக்குத் தெரியாதென்றும், குமாருக்கு சென்றமாதம் இருபதாம் திகதிதான் திருமணமானதாகவும் தெரியவருகிறது.

## உணவு முத்திரை வழங்கப் பணிப்பு

(செங்கலடி)

உணவு முத்திரை பெறத் தகுதியுடைய புதிய குடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்குவதற்கு அனுமதியளிக்குமாறு சமூகசேவைகள் பணிப்பாளர் மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்.

உணவு முத்திரை பெறும் குடும்பங்களில் பிறந்த குழந்தைகள் பிரதான உழைப்பாளியில் தங்கியிருந்து அவர் இறந்திருந்தால், அல்லது அவரைப் பிரிந்திருந்தால் அந்தக் குடும்பங்கள், புதிதாக திருமணத்தின் பின் உருவாக்கப்பட்ட உணவு முத்திரைக்கு தகுதியான குடும்பங்கள், இவர்களுக்கு உணவு, மண்ணெண்ணை முத்திரையின் 5 வது சுற்று வழங்குவதற்கு அனுமதியளிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட சமூக சேவைகள் உதவிப் பணிப்பாளர் சமூக சேவைகள் பணிப்பாளரை கேட்டுள்ளார். (39)

## மட்டக்களப்பில் சிரமதானம்

இலங்கை விமானப் படையின் 39 வது ஆண்டு நிறைவை முன்னிட்டு மட்டக்களப்பு விமானப் படையினர் மட்டக்களப்புபொதுவைத்தியசாலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

4ம் வார்ட்டில் கட்டிட சிறு திருத்த வேலைகளையும் மின் திருத்த வேலைகளையும் சிரமதான மூலம் திருத்தி அமைத்தனர்.

## த. தே. இ...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

போதே இதுபற்றித் தெரியவந்தது. நுவரெலியாவிலுள்ள கடைச் சொந்தக்காரர்களிடம் இருபத்தெட்டாயிரம் ரூபாவை கொள்ளை அடித்துக்கொண்டு தப்பிச் செல்லும்பொழுது பொலீஸார் இவரைக் கைதுசெய்தார்கள். விஜயபாலனும் அவரது சகபாடிகளும் தப்பிச் செல்லும்போது பாதசாரி ஒருவரை கைத் துப்பாக்கியால் சுட்டுள்ளார்கள். இதனால் அந்த நபர் படுகாயம் அடைந்துள்ளார். சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த பொலீஸார் விஜயபாலனைக் கைதுசெய்தார்கள்.

விஜயபாலன் பொலீசாருக்கு அளித்த தகவல்களின்படி, தமிழ் தேசிய இராணுவமும், ஈ. என். டி. எல். எவ்.வும் மற்றும் குழுக்களையும் பயன்படுத்தி, கொலைகளையும் கொள்ளைகளையும் நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

## சாரதி விடுதலை

(யாழ்ப்பாணம்)

மேஜர் காண்டீபனின் மறைவிற்கு காரணமாய் இருந்த பஸ் சாரதி நேற்று புலிகளினால் விடுதலை செய்யப்பட்டார்.

மனிதாபிமான அடிப்படையில் அவர் விடுதலை செய்யப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

விபத்துக்குக் காரணமாயிருந்த மினிபஸ் ஒப்படைக்கப் பட்டது. (தி)

## கால் ஊனமுற்றோருக்கு முச்சக்கர வண்டி

(செங்கலடி)

கால் ஊனமுற்றோருக்கு வழங்குவதற்காக 10 முச்சக்கர வண்டிகள் மட்டக்களப்பு சமூகசேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொன்றும் 3 ஆயிரம் ரூபா பெறுமதியான இம் முச் சக்கரவண்டிகள் மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 10 பேருக்கு விரைவில் வழங்கப்படும் என சமூக சேவகள் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (39

## சைக்கிள் விபத்தில் வையோதிபர் மரணம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ். சுண்டுக்குளியில் சைக்கிள்கள் எதிரும் புதிருமாக மோதுப்பட்டதில் க. திருநாவுக்கரசு (50) என்பவர் மரணமானார்.

இவர் கச்சேரி - நல்லூர் வீதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இவரது சடலம் யாழ் வைத்திய சாலையில் பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டுள்ளது. (தி)

## மினொழுக்கால் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)

அயல் பெட்டி உபயோகிப்பதற்காக பிளக் வயரை மின் சாரத்துடன் இணைக்கும் போது மின் ஒழுக்கு ஏற்பட்டதில் நடேசன் என்பவர் பலியானார்.

இவர் வண்ணார்பண்ணைப் பகுதியைச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டது. (தி)

## பொய்ச்செய்தியால்

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிய தாய் நஞ்சருந்தி தற்கொலை செய்து கொண்டார்.

அல்லைப்பிட்டியை சேர்ந்த எம் மகேஸ்வரி (50) என்பவரே தற்கொலை செய்து கொண்ட பெண்மணியாவார்.

இவரது சடலம் யாழ். வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (தி)

## தொடர்பு

(பண்டத்தரிப்பு)

மக்கள் வங்கியின் தலைமை அலுவலகம் தமிழ் பிரதேசத்தில் இயங்கும் அதன் கிளைகளுடன் தமிழில் தொடர்பு கொள்ளத் தொடங்கியுள்ளது

தமிழ் மொழிக்கு அரசகரும சம அந்தஸ்து சட்ட மூலம் இயற்றப்பட்டு பல ஆண்டுகள் ஆகியும் அரசாங்கம் முழுமையாக தமிழ் உபயோகத்தை நடைமுறைப்படுத்தாத நிலையிலும் மக்கள் வங்கி கிளைகளுடன் தமிழில் தொடர்பு கொள்வதை மக்கள் பாராட்டுகின்றனர். (12)

## தற்கொலை

(சுதுமலை)

சண்டிலிப்பாய் கல்வளையைச் சேர்ந்த கனகரத்தினம் சாந்தகுமாரி (24) என்பவர் கடந்த வியாழக்கிழமை நச்சுத் திராவகம் அருந்தித் தற்கொலை செய்துகொண்டார். கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னர் வீட்டாரை எதிர்த்து காதலித்துத் திருமணம் செய்துவீட்டைவிட்டுச்சென்ற எனது மகளை இப்போது நான் பிணமாகப் பார்க்கின்றேன். எனது மகளுக்கு இக் குறுகிய காலத்துக்குள் ஏன் குடும்ப வாழ்க்கை கசப்பாகப் போனது என்பது தனக்குத் தெரியவில்லை என்று அவருடைய தாயார் க. சேது என்பவர் எம்மிடம் தெரிவித்தார். பிரேத விசாரணை யாழ். ஆஸ்பத்திரியில் நடைபெற்றது. (19)

## குளிரூட்டல்......

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி

பதால் ஆங்கிலப் பட்டதாரியாக இருக்கவேண்டும். அல்லது பிரித்தானிய கவுன்சில் நடாத்திய ஆங்கிலப் பரீட்சையில் சித்திபெற்றிருக்க வேண்டும்.

இதற்கான நிதியுதவிபெறக் கூடிய ஐந்து நன்கொடைவழங்கும் நிலையங்களின் முகவரிகள் தரப்பட்டுள்ளதாகவும் விண்ணப்பங்களை இம்மாத முடிவுக்குள் பெற்று தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான நிதியுதவி பெற்றுக் கொடுக்கப்படும் எனவும் இச் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர் பூரண விபரம் அடங்கிய மாணவர் பாடத்திட்டம், தற்போதைய தொழில், பயிற்சியின்பின் செய்யவிருக்கும் தொழில், பயிற்சிபெற விரும்பும் பகுதிகளையும் தமது விண்ணப்பத்தில் குறிப்பிடவேண்டும். இது தொடர்பாக மல்லாகம் கிராம அபிவிருத்தி சங்கத் தலைவருடன் தொடர்பு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது.

வார்த்தைக்கு பிரேமதாஸா அழைத்தார். இதன் பிறகு இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு வேண்டினார். ராஜரீகப் பேச்சுவார்த்தைகள் பல இழுபறிகளுக்குப் பிறகு இந்திய இராணுவம் ஒரு கால அட்டவணைக்கமைய ஸ்ரீலங்காவை விட்டு வெளியேறச் சம்மதித்தது. இப்போது பல தமிழ் மாவட்டங்களிலிருந்து இந்திய இராணுவம் வெளியேறி விட்டது,

## இந்தியாவின் இமாலயத் தவறு

தமிழ் ஈழத்தில் இந்தியாவின் இராணுவத் தலையீடு ஒரு இமாலயத் தவறென்பதை இந்தியா உட்பட சர்வதேச அரசியல் அவதானிப்பாளர்களும் கருதுகிறார்கள். இராணுவத் தலையீட்டால் எந்த விதமான பயனுமில்லை எதையும் சாதிக்கவுமில்லை. எதிரிடையான விளைவுகளையே இராணுவத் தலையீடு இந்தியாவுக்கு ஏற்படுத்தியது இந்திய இராணுவத்தின் முழு நடவடிக்கைகளையும் கொண்டு, இந்திய இராணுவத் தலையீட்டின் முரண்பாட்டுத் தன்

வேண்டும் என்ற தந்திரோபாயம் விடுதலைப் புலிகளைத் தமிழர் மண்ணில் சக்திவாய்ந்த ஒரு அரசியல் இராணுவ அமைப்பாகப் பரிணமிக்கச் செய்தது.

இந்திய நிர்வாகம் மக்களின் அபிலாசைகளையும், விருப்பங்களையும் முற்றாகப் புறக்கணித்து, வெகுஜன ஆதரவைப் பெற்ற ஒரு தேசிய விடுதலை இயக்கத்துக்கு எதிராகப் போராடத் துணிந்து களத்தில் இறங்கியதால். இந்தியாவின் சகலவிதமான ஊக்குவிப்புகளும் தோல்வியைத் தழுவின. அரசியல், நிர்வாக முடிவுகளை செயற்படுத்த ஒரு மரபு ரீதியான இராணுவத்தைப் பாவித்தது மற்றொரு பெரிய தவறாகும். கிழக்காலும் ஒதுக்கப்பட்டு, மேற்காலும் வெறுக்கப்பட்ட ஈ. பி. ஆர். எல் எவ்வைச் சேர்த்துக்கொண்டு, அந்தக் குழுவைப் பாதுகாக்க, பலவந்தமாக இளைஞரை வளைத்துப் பிடித்து கட்டாய இராணுவத்தை அமைத்தமை முன்னாள் இந்திய நிர்வாகத்தின் கணிப்புகளின் இறுதியான பிழையாகும்.

# மரண அறிவித்தல்

## திருமதி விஜயலச்சுமி கைலைநாதன்

கொக்குவில் செம்பியன் லேனைச் சேர்ந்த திருமதி. விஜயலச்சுமி கைலைநாதன் அவர்கள் 1990. 03. 05 ஆம் திகதி காலமானார்.

அன்னார் கைலைநாதன் (பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ்) அவர்களின் அன்பு மனைவியும், செல்வி. கோபிதாவின் அன்புத் தாயாரும், காலஞ் சென்ற காரைநகரைச் சேர்ந்த பத்மநாதன், பேரம்மா அவர்களின் அன்பு மகளும், மயிலிட்டி தெற்கைச் சேர்ந்த அண்ணாமலை, காலஞ்சென்ற சின்னத்தங்கம் அவர்களின் அன்பு மருமகளும், S. P. S. ரான்ஸ்போர்ட் சேர்விசைச் சேர்ந்த சிவனேசன், சிவலிங்கம், சுத்தானந்தன், சர்வானந்தன், விவேகானந்தன், நடராசா (ஜேர்மன்) சிவபாதம்(ஜேர்மன்) செல்வநாயகம் (சுவீஸ்), சிவராசா (கனடா), சோமசுந்தரம் (சுவீஸ்), திருமதி சரோஜினிதேவி சிவநாதன் அவர்களின் அன்புச்சகோதரியும் குப்பிளானைச் சேர்ந்த காலஞ் சென்ற அன்னம்மாவின் பெறா மகளும், பிரகாஷ் ரான்ஸ்போட் சேர்விஸ் காலஞ்சென்ற சந்திரசேகரம், குலசிங்கம், கந்தசாமி, சரஸ்வதி, சத்தியதேவி, சரோஜினிதேவி (சுவீஸ்), சகுந்தலாதேவி (சுவீஸ்), தேவராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் ஈமைக்கிரியைகள் 1990. 03. 10 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் இல. 44 செம்பியன் வீதியிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

இல. 44, செம்பியன் லேன், கொக்குவில். — தகவல் குடும்பத்தவர்கள்.

(R.122)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 10-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.